விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 304 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 02 புதன்கிழமை (19.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

வவுனியா நெடுங்கேணியில்

21 வயது இளம் யுவதி சுட்டுப் படுகொலை

(வவுனியா)

வவுனியாவில் இளம் யுவதி ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 9 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் வவுனியா நெடுங்கேணி சூடுவெந்தான் பகுதியைச் சேர்ந்த துரைராசசிங்கம் பிரிந்தா (வயது 21) என்ற இளம் யுவதியே உயிரிழந்தவராவார்.

இயற்கை கடன் 15

வட பகுதியில்

கனமழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்) .

எதிர்வரும் நாட்களில் வடமாகாணத்தில் கன மழைக்கு வாய்ப்புள்ளதாக யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். 15

யாழில் போதைப் பாவனைக்கு எதிராக

விழிப்புணர்வு பேரணி

15

வடக்கு, கிழக்கு

பிரச்சினைகளை தீர்க்க விசேட குழு

அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

- அரசியல் கைதிகள் விவகாரம், காணாமல்போனோர் விவகாரத்தைத் தீர்க்க நடவடிக்கை.
- வடக்கில் அதிகரித்த போதையை கட்டுப்படுத்த நடவடிக்கை.

ஜனாதிபதி ரணில் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

குறித்த கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனை தொடர்பாக நேற்று 15

அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலாளர்

இன்று இலங்கை விஜயம்

(கொழும்பு)

தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியங்களுக்கான அமெரிக்காவின் பிரதி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ இன்று இலங்கைக்கு விஜயம்செய்யவுள்ளார்.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் 15

போதை மாத்திரைகளுடன்

அச்சுவேலி பகுதியில் ஒருவர் நேற்று கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை 22 போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமானப்படை புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களின் 15

இந்திய இழுவை படகுகள் தீவக பகுதிகளில் அத்துமீறல்

யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தீவக பகுதிகளான நெடுந்தீவு மற்றும் அனலைதீவு பகுதிகளில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு நூற்றுக்கணக்கான இந்திய இழுவைமடிப் படகுகள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அதனால் மீன்பிடிக்க சென்ற அப்பகுதி மீனவர்கள் இந்திய இழுவைமடிப் 15

மன்னாரில் விபத்து முதியவர் உயிரிழப்பு

(மன்னார்)

மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலகம் அருகில் வீதியில் நின்று கொண்டிருந்த முதியவர் மீது பஸ் மோதியதில் சாத்தான்குளம் பகுதியைச் சேர்ந்த 74 வயதான முதியவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் இடம்பெற்ற விபத்தின் போது பலத்தகாயமடைந்த நிலையில், குறித்த வயோதிபர் வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற 15

கரவெட்டி இளைஞன்

நீர்வேலியில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கரவெட்டியை சேர்ந்த இளைஞர் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நீர்வேலி பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் வீடொன்றில் தங்கி நின்று மேசன் வேலையில் ஈடுபட்டு வந்த விஜயபாகு நிதர்ஷன் (வயது 27) எனும் இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் நேற்றைய தினம் 15

சில அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டன

- ரூ. 100னால் சீனியின் விலை குறைப்பு
- பால்மாவின் விலையில் மாற்றமில்லை
- கோதுமை மாவின் விலையும் குறைவடைகின்றது

(கொழும்பு)

சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதோடு பால்மா விலைக்குறைப்பு தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும், நேற்று ஊடக சந்திப் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவிழாவும் சேவைநலன் பாராட்டும்

திருமதி **மரிய அனற் மைக்கல் ராஜ்குமார்**

(B.A, PGDE) (SLTS - I)

தமிழ் அறிவின் துளிகளை
அள்ளிவந்து வகுப்பறை எங்கும்
புதுமை செய்கின்ற அற்புத வித்தகியே!

பாடசாலையின் நற்பெயருக்காய்
ஆசான்கள் அனைவரையும்
அரவணைத்து வழிப்படுத்தி
நல் அதிபருக்கு துணை நின்று,

ஓராண்டுதனில் பிரதி அதிபராய்
பதவியதனை வகித்து
பணிநிறைவு காண
இன்றைய நன்னாளாம் மணிவிழாவில்
வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றோம்

சேவையாற்றிய பாடசாலைகள்

க/கண்டி கதிரேசன் குமார மகா வித்தியாலயம்
(15.04.1985 - 18.03.1990
யா/கலட்டி றோ.க.ஆண்கள் பாடசாலை
(19.03.1990 - 02.07.1991)
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
(03.07.1991 - 04.10.2010)
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்
(05.10.2010 - 18.10.2022)

Best Wishes!

பாடசாலைச் சமூகம்
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்

(C-5119)

சீமான் - சிறீதரன் எம்.பி சந்திப்பு



(சென்னை)

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப் பொன்று நேற்றுமுன்தினம் மாலை சென்னை பாலவாக்கத்தில் உள்ள சீமானின் இல்லத்தில் நடைபெற்றுள் ளது.

இதன்போது, உலக அரங்கின் சமகால அரசியல் நகர்வுகள், அதி கூடிய சமூக, பொருளாதார அழுத்தங் களுக்கு மத்தியிலும் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப் படும் அநீதிகள், வாழ்வுரிமைக்காக போராடும் ஈழத்தமிழர்களின் எதிர்கால நலன்கருதி முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரை யாடப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலின்போது, நாம் தமிழர் கட்சியின் முதன்மை உறுப்பின ரும் மூத்த சட்டத்தரணியுமான சந்திர சேகர், இளம் செயற்பாட்டாளர் மைக் கல் உள்ளிட்ட நாம் தமிழர் கட்சியின் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண் டிருந்தனர். (ம-7,104)

வேலையாள் தேவை

திருநெல்வேலியில் உள்ள எமது வியா பார கட்டிடத்திற்கு துப்பரவு செய்து பரா மரிப்பதற்கு தோட்ட வேலையில் ஆர்வம் உடைய 35க்கும் 55க்கும் இடையில் வய தெல்லைஉடைய ஆண்கள் தேவை.
திருநெல்வேலிக்கு அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
(13180)
தொடர்பு:-
074 368 0029

பணியாளர் தேவை

எமது கணக்காய்வு நிறுவனத்துக்கு
1. கண்க்கியல் அறிவும் அனுபவமும் உடைய கணக்காளர்.
2. கணக்கியல் பயிலுநர்கள் வர்த்தகப் பிரிவில் A/L சித்தியடைந்தோர், HNDA, CIMA, Chartered மாணவர்கள்.
தொடர்பு:- (13180)
077 953 0496

கார்/வான் வாடகைக்குண்டு

கார்கள் / வான்கள்
வாடகைக்கு கொடுக்கப்படும்
RSP Rent a Car
077 898 9691 (13178)

வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

மரண அறிவித்தல்

கோவிந்தபிள்ளை தங்கவேலு

தோற்றம்	மறைவு
27.09.1961	17.10.2022

குரும்பைகட்டி புலோலி தென் மேற்கைப் பிறப்பிடமாகவும் காந்தி யூர் புலோலி தென்மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கோ.தங்கவேலு அவர்கள் நேற்று முன்தினம் (17.10.2022) திங்கட் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான கோவிந்தபிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் சிங்காரவடிவேலு - பொன்னம்மா தம்பதி யரின் அன்பு மருமகனும் பூபதியின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான தங்கராசா, மாணிக்கவாசகம் மற்றும் கனகம்மா, பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற மகாதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அரவிந்தரூபன் (லண்டன்), அரவிந்தராம் (கிராம உத்தியோகத்தர்), கஸ்தூரி (ஜேர்மனி), அனுசாந் (லண்டன்), அருண் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தக்ஷா (லண்டன்), நவராணி (பிரதேச செயலகம் - மருதங்கேணி) ஆகியோரின் அன்பு மாமனாரும் தஷ்விகா, அபினேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.10.2022) புதன்கிழமை முற்பகல் 9 மணியளவில் காந்தியூர் புலோலி தென்மேற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மந்திகை கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- குடும்பத்தினர்
077 171 8761 077 407 1026

(C-5120)

கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கிராம உத்தி யோகத்தராக கடமையாற்றும் **த.அரவிந்தராம்** அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் **கோவிந்தபிள்ளை தங்கவேலு**

அவர்கள் 17.10.2022 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்...
பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(C-5117)

தோற்றம்	மறைவு
27.09.1961	17.10.2022

7 ஆம் ஆண்டு நிறைவில் நினைவுகள் சுமந்து...

திருமதி
நிகிலா சுதர்சன்

திதி – அபரபக்க நவமி 30.10.2022

மலர்வு 17.04.1971 உதிர்வு 05.11.2015

இயற்கை சூழ் புகலிடம்தனில்
மானிடன் என உயிர் பெற்று தரித்தாலும்
எம்மிடத்தில் காணும் முன்றெழுத்தில் புதுமைதான்
நிகரிலாப் புதிர் எம் தாயவள்
விடையமைக்கப் போவதில் தோற்கின்றோம்
அரண் அமைத்த உம் அன்பிடத்தில்...
அரவணைத்த உம் கைகளில் ... அம்மா

27/14, முதலாம் ஒழுங்கை,
சுன்னாகம்.

(13170)

கணவர், பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றத்தை கலைக்க இடமளிக்கப் போவதில்லை

ஜனாதிபதி ரணில் உறுதி

(கொழும்பு)

பாராளுமன்றத்தை கலைக்கப்போவதில்லை. அதற்கான எந்த ஆயத்தமும் செய்யவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் திங்கட் கிழமை இடம்பெற்ற ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ளார்.

20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் பாராளுமன்றம் கலைக்கப்படும் காலத்தை இரண்டரை வருடங்களாக குறைத்துள்ளதாக பல பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் இதன்போது தெரிவித்துள்ளனர்.

எனினும் அரசியலமைப்பின் 19 ஆம் திருத்தச்சட்டத்தின் மூலம் அதனை நான்கரை வருடங்களாக அதிகரித்ததாகவும் அது குறித்து 22 ஆம் திருத்தச்சட்டத்தில் எந்தவித திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் வினவியுள்ளனர்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தை கலைப்பதாக இருந்தால், அதை தானே செய்ய வேண்டும் என்றும் அதற்கான எந்த ஆயத்தமும் தற்போது இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

22 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்துக்கு ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் பெரும்பாலான பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் வெளிநாடுகளின் ஆதரவைப் பெறும் வகையில் 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமென நீதி அமைச்சர் கலாநிதி. விஜயதாச ராஜபக்ஷ மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்கு 22 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் அவசியம் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதா என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேகுணவர்தன வினவியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பாக மேலதிக கலந்துரையாடலில் ஈடுபட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவிற்கு அறிவித்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. (நி)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மத்திய மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடன் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை எதிர்வரும் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் காலை 9.30 மணி தொடக்கம் பி.ப 4.30 மணிவரை வடமாகாண சபை வளாகம், கைதடியில் நடைபெறவுள்ளது.

குறித்த நடமாடும் சேவையில் வாசித்தலில், எழுதுதலில், விசேட தேவையுடையோருக்கான சாரதி அனுமதிப் பரீட்சையும் மருத்துவச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளலும், சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளல், தனிப்பட்ட மோட்டார் கோச்சினை ஒமினி பஸ் ஆக மாற்றம் செய்தல், வாகனப் பதிவுப் புத்தகத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளல், வாகன இலக்கத்தகடு பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள், வாகன உடைமை மாற்ற விண்ணப்பங்கள் கையேற்றல், 2014/2015 ஆம் ஆண்டு செயற்றிட்டத்தின் ஊடாக வழங்கப்பட்ட வாகனங்களில் நிபந்தனைகளை நீக்குதல், வாகன நிறை சான்றிதழ் பெற்றுக் கொள்ளல், இதுவரை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் சமர்ப்பிக் கப்பட்டு (RMB) தீர்க்கப்படாத நிலுவைகள், வாகன வருமான வரி தொடர்பானவை ஆகிய சேவைகள் மேற்கொள்ள திட்ட மிடப்பட்டுள்ளன. (4)

புக்கர் விருதை வென்றார் இலங்கை எழுத்தாளர் செஹான்

(கொழும்பு)

இலங்கையின் எழுத்தாளர் செஹான் கருணாதிலக்கவுக்கு 'The Seven Moons of Maali Almeida' என்ற அவரது நாவலுக்காக 2022 இற்கான புக்கர் விருது கிடைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நடந்த பல அநீதிகளை ஆவணப்படுத்தும் இலக்கியமாக இது விளங்குகின்றது.

2019 ஆம் ஆண்டு முதல் இந்த விருது வழங்கும் விழா வில் சிறப்பு விருந்தினராக பங்கேற்கும் பிரித்தானிய ராணி கமிலாவிடமிருந்து விருதை பெற்றுள்ளார்.

இந்நிலையில், புக்கர் விருதை பெற்ற இரண்டாவது இலங்கையர் என்ற பெருமையை செஹான் கருணா திலக்க பெற்றுள்ளார்.

இதற்கு முன்னர், 1992 ஆம் ஆண்டில் "தி இங்கிலீஷ் பேஷண்ட்" நாவலுக்காக மைக்கேல் ஒண்டாட்ஜே புக்கர் விருதை வென்றுள்ளார்.

"இலங்கை சொந்தங்களே எங்கள் கதைகளை கூறுவோம்... கூறிக்கொண்டே இருப்போம்...." நிகழ்வின் இறுதியில் செஹான் தமிழில் கூறிய வார்த்தைகளே இவை...அவர் மும்மொழியிலும் உரையாற்றி இலங்கை மண்ணின் மைந்தன் என்பதை உலகிற்கு எடுத் துக்காட்டியது மட்டுமில்லாது படைப்பாளிகள் மதம், இனம், மொழிகளை கடந்த அனைவருக்கும் பொதுவானவர்கள் என்பதை உணர்த்தியுள்ளார். (நி)

உ
சிவமயம்

சிவபூமி நிலையம்

கொழும்பு

Sivapoomi Colombo Center

திறப்புவிழா அழைப்பிதழ்

காலம்

20.10.2022 வியாழக்கிழமை
முற்பகல் 10.00 மணி தொடக்கம்
12.00 மணிவரை

தலைவர்

செஞ்சொற் செல்வர். கலாநிதி. ஆறு. திருமுருகன்
(தலைவர்-சிவபூமி அறக்கட்டளை)

அன்புடையீர் வணக்கம்

எமது சிவபூமி அறக்கட்டளையின் ஆன்மீக சமூகப்பணிகளைத் தலைநகர் கொழும்பிலும் ஆற்ற இறையருள் கைகூடியுள்ளது. கொழும்பு பம்பலப்பிட்டி ஹக் வீதியிலுள்ள 34 வது இலக்க கட்டடத்தை திருமதி.திரவியம் சபாரட்ணம் அம்மையார் அவர்கள் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

கொழும்பு சிவபூமி நிலையத் திறப்பு விழா வைபவத்தில் தாங்கள் கலந்து சிறப்பித்து ஆசிர்வதிக்குமாறு உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

இல.34, ஹக் வீதி
பம்பலப்பிட்டி.
No 34, Haig road,
Bambalapitiya,
Colombo-4.

(1374)

சிவபூமி அறக்கட்டளை,
இலங்கை.
021-2227938
Sivapoomi@gmail.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இராசநாயகம் வெற்றிக்கிண்ணம் ஞாசியா வி.கழகம் சம்பியன்

இராசநாயகம் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் றெபேக்சனின் இறுதிநேர சிறப்பான கோலினால் மெசியாவை வீழ்த்தி ஞாசியா வி.கழகம் சம்பியனானது.

பூநகரி உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட வடமாகாண அணிகளை உள்ளடக்கிய அமரர் இராசநாயகம் வெற்றிக் கிண்ணம் - 2022 உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

அமரர் இராசநாயகம் அறக்கட்டளையின் முழுமையான நிதி அனுசரணையுடன் பூநகரி உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட வடமாகாண 40 அணிகளை உள்ளடக்கிய மாபெரும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி போட்டியில் மன்னார் பள்ளிமுனை புனித ஞாசியா வி.கழகம் வலைப்பாடு பூநகரி மெசியா வி.கழகம் 1 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வடமாகாணத்தின் சம்பியனாக மீண்டும் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளனர்.

இப் போட்டியில் சிறந்த வீரன் - றெபேக்சன், சிறந்த கோல் காப்பாளர் - றொசாறியோ, சிறந்த பின்கள வீரர் - டியுலன், தொடராட்ட நாயகன் - அஜந்தன் ஆகியோர் தெரிவாகினர். (மு-7)



மணிவிழா வாழ்த்து

30.03.2022 மணிவிழாவில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட ஆசிரியர்

திரு.பொன்னன் பரஞ்சோதி

(ஆரம்பக் கல்வி பயிற்சி - 2-1)

சேவைக்காலம்

யா/ ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி (2003- 2004)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை (2004-2006)

யா/ வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம் (2006-2014)

யா/நடராஜ இராமலிங்க வித்தியாலயம் (2015-2022)

திருமதி நவலோகநாதன் ஜெகதாம்பாள்

(பகுதித் தலைவர் தரம் 9-11, BA, MA (தமிழ்) SLTS-I)

சேவைக்காலம்

யா/ ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி (1988-2010)

யா/ நடராஜ இராமலிங்க வித்தியாலயம் (2011 - 2012)

யா/ வண்ணை நாவலர் வித்தியாலயம் (2013 - 2018)

யா/ நடராஜ இராமலிங்க வித்தியாலம் (2019 - 2022)

அகவை அறுபதில் கால்பதித்து மணிவிழாக் காணும் ஆசிரியர்களை சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்.

(13179) ஆசிரியர் நலன்புரிக் கழகம் (யா/ நடராஜ இராமலிங்க வித்தியாலயம்)

ஐப்பசி மாத இராசி பலன்கள் 18.10.2022-16.11.2022

மேஷம்

மிதுன - செவ்வாய் வக்கிரம்

கருத்துக்களை பிறரிடம் பகிர்ந்து கொள்ளும் மேஷ இராசி வாசகர்களே!

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் சகாய ஸ்தானத்தில் இருக்கிறார். இவர் மாதத்தின் மையப் பகுதியில் வக்கிரம் பெறுவதால் உடல் நலனில் கவனம் தேவை. எந்தக் காரியமும் அதிக முயற்சிக்குப் பிறகே பலன் தரும்.

துலாம் - சுக்கிரன் சஞ்சாரம்

ஐப்பசி 2 ஆம் திகதி துலாம் இராசிக்குச் செல்லும் சுக்கிரன், அது சொந்த வீடு என்பதால் பலம் பெறுகிறார். தனாதிபதி பலம் பெறுவதால் பொருளாதாரம் சரளமாகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சுபச் செலவுகள் அதிகரிக்கும். தடைப்பட்டிருந்த சுபகாரியங்கள், இல்லத்தில் தானாக நடைபெறும். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து வருமானம் உயரும்.

துலாம் - புதன் சஞ்சாரம்

புதன் ஐப்பசி 6 ஆம் திகதி துலாம் இராசிக்குச் செல்கிறார். அங்குள்ள சுக்கிரனோடு இணைந்து "புத சுக்கிர யோக"த்தை உருவாக்குகிறார்.

இதனால் பொருளாதார நிலை உயரும். பழைய கடன்களை கொடுத்து மகிழ்வீர்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்கள் வாகனம் வாங்கவும், வீடு கட்டவும் கடன் கேட்டு விண்ணப்பித்திருந்தால், அது கிடைக் கப்பெறும். கடமையைச் சரிவரச் செய்து பக்கத்தில் இருப்பவர்களின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் இராசிநாதன் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக் கியத்தில் அடிக்கடி தொல்லை ஏற்படும். அது மட்டுமல்லாமல் அலுவலகப் பணிகளை முடிக்க முடியாமல் திணறு வீர்கள். பணியில் ஓய்வின்றி உழைக்க வேண்டியதிருக்கும்.

உள்ளத்தில் நினைத்ததை உடனடியாகச் செய்ய இயலாது. சகோதர வர்க்கத்தினரால் சஞ்சலங்கள் ஏற்படலாம்.

"தனவரவு வந்தாலும் அது தங்கவில்லையே" என்று கவலைப்படுவீர்கள். எதைச் செய்தாலும் அனுபவம் உள்ளவர்க ளின் ஆலோசனையைக் கேட்டுச் செய்யுங்கள்.

விருச்சிக-புதன் சஞ்சாரம்

புதன், அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கிறார். இதனால் "கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்" என்பதற்கு ஏற்ப பல நல்ல வாய்ப்புகள் தேடிவரும். பணப்புழக்கம் அதிக ரிக்கும்.

பக்கத்தில் உள்ளவர்கள் பக்க பலமாக இருப்பர். இழந்தவற்றை மீண்டும் பெறும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் தற்காலிகப் பணியில் இருப்பவர்களுக்கு நிரந்தரப் பணி அமையும்.

விருச்சிக - சுக்கிரன் சஞ்சாரம்

சுக்கிரன், விருச்சிகத்தில் இருந்த படியே தன ஸ்தானத்தைப் பார்ப்பதால் தனவரவு திருப்தி தரும். குடும்ப முன்னேற்றம் கூடும்.

ரிஷபம்

மிதுன - செவ்வாய் வக்கிரம்

சமூக சேவையில் ஈடுபட்டு பிறருக்கு உதவ விரும்பும் ரிஷப இராசி வாசகர்களே!

ஐப்பசி மாதக் கிரக நிலை களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்கிரன் மாதத் தொடக்கத்திலேயே சொந்த வீட்டி ற்குச் சென்று பலம் பெறப் போகிறார். எனவே ஆரோக்கியம் சீராகும். ஆதாயம் தரும் தகவல் அதிகம் கிடைக்கும்.

துலாம் - சுக்கிரன் சஞ்சாரம்

சுக்கிரன், ஐப்பசி 2 ஆம் திகதி துலாம் இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். 6க்கு அதிபதி 6 இல் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில், ஜீவன ஸ்தானம் வலுவடைகிறது. எனவே தற்காலிகப் பணியில் இருப்பவர்களுக்கு நிரந்தரப் பணி அமையும். தொழிலில் புதிய கூட்டாளிகள் வந்திணைந்து, பொருளா தாரம் உயர வழி வகுத்துக் கொடுப்பர். உறவினர் பகை அகலும். நீண்ட நாளாக நடைபெற்று வந்த வழக்குகள், உங்களுக்கு சாதகமாக முடியலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நேரம் இது.

துலாம் - புதன் சஞ்சாரம்

புதன், ஐப்பசி 6 ஆம் திகதி துலாம் இராசிக்கு செல்கிறார். அங்குள்ள சுக்கிரனோடு இணைந்து "புத சுக்கிர யோக"த்தை உருவாக்குவதால் நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. வெளிநாட்டில் இருந்து அழைப்புகள் வரலாம். மாற்று மருத்துவத்தால் உடல்நலம் சீராகும். இல்லத்தில் சுபகாரியங்கள் நடைபெறுவதில் இருந்த தடை அகலும்.

செவ்வாய் வக்கிரம் பெறுவதால், விரயங்கள் கட்டுக்குள் அடங்கியிருக்கும். அதேநேரத்தில் வீட்டில் குழப்பங்கள் அதிகரிக்கும். இல்லத்தில் உள்ளவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வது அரிது. பணிபுரியும் இடத்தில் பக்குவமாக நடந்துகொள்ளுங்கள்.

மேல திகாரிகள் உங்களிடம் அதிக பணிச் சுமையை திணிக்கலாம். வீடு தேடி வந்த வரன்கள் முடிவடையாமல் போக லாம்.

விருச்சிக - புதன் சஞ்சாரம்

புதன், சப்தம ஸ்தானத்திற்கு வரும் போது பணப் புழக்கம் சரளமாக இருக்கும். பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும். மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக் கசப்புகள் மாறும்.

மங்கல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி வந்து சேரும். உத்தியோக த்தில் கேட்ட சலுகைகள் கிடைக்கும்.

விருச்சிக - சுக்கிரன் சஞ்சாரம்

சுக்ரன் சப்தம ஸ்தானத்திற்கு வருகை யில், செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

திடீர் தனவரவும் உண்டு. அத்தியாவசியப் பொருட்களை வாங்கும் முயற்சி கைகூடும். வாசல் வரை வந்து கை நழுவிப் போன வரன்கள், மீண்டும் வந்து சேரும். சுப விரயங்கள் அதிகரிக்கும். வெளிநாட்டு நிறுவனங் களில் இருந்து அழைப்புகள் வரலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொல்.திருமாவளவன்- சிறீதரன் எம்.பி சந்திப்பு

(சென்னை)

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவனை அவரது சென்னை அலுவலகத்தில் வைத்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்திய மக்களவை உறுப்பினராக இருந்துகொண்டு ஈழத்தமிழர் நலன்சார் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டுவரும் தொல்.திருமாவளவனோடு நடைபெற்ற மேற்படி சந்திப்பில், ஈழத்தமிழர் நலனோம்புகைச் செயற்பாடுகள், தமிழ்த் தேசிய இனப் பிரச்சினை தொடர்பில் இந்திய மத்திய அரசின் தற்போதைய நிலைப்பாடு, அந்நிலைப்பாட்டை தமிழர்களுக்குச் சாதகமாக மாற்றிக் கொள்வதற்கு நிலத்திலும் புலத்திலும் மேற்கொள்ள வேண்டிய எத்தனங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டன என்று சிறீதரன் எம்.பி தெரிவித்தார்.

நீண்டகாலத்தின் பின் நடைபெற்ற இந்தச் சிநேகபூர்வமான சந்திப்பு தன்னளவில் நிறைவானதாக அமைந்திருந்தது எனவும் அவர் தெரிவித்தார். (நி)

சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் நவம்பர் மாத இறுதிக்குள் வெளியீடு

(கொழும்பு)

சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் 2022 நவம்பர் மாத இறுதிக்குள் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்தார். (நி)

அரசாங்க அறிவித்தல்
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல்- 2023

மாவட்டச் செயலாளர், யாழ்ப்பாணம் சார்பில் யாழ். மாவட்ட செயலக திணைக்களப் பெறுகைக் குழுவினால் யாழ். மாவட்ட செயலகம் மற்றும் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2023 ஆம் ஆண்டில் கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளை மேற்கொள்வதற்கும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும் வட பிராந்தியத்திலுள்ள நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை மாவட்டச் செயலக பெறுகை அலகு (அறை இல : 42) மற்றும் பிரதேச செயலகங்களில் **2022-10-20** ஆம் திகதி தொடக்கம் **2022.11.29** ஆம் திகதி வரை அலுவலக நேரத்தில் அல்லது www.jaffna.dist.gov.lk என்ற இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2022.11.30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023"** எனக் குறிப்பிட்டு **"அரசாங்க அதிபர், பெறுகை அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் பெறுகை அலகில் (அறை இல : 42) சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விபரத்திற்கமையவும் ஏனைய வழங்குநர்கள் தொகுதி ஒன்றிற்கு ரூபா 500/- இனையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக "மாவட்ட செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் பெயரில் உள்ள 7041946 எனும் இலங்கை வங்கி கணக்கிலக்கத்திற்கு வைப்பில் இடப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் இப்பதிவுக் கட்டணத்தை செலுத்தத் தேவையில்லை. வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புச் சிட்டையை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பப் படாத விண்ணப்பங்களும் **2022.11.30** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கப்படாத விண்ணாங்களும் நிராகரிக்கப்படும்.

ஒப்பந்த தொகை	பதிவுக் கட்டணம்.
ரூபா 2,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை	ரூபா 2,000
ரூபா 2,000,000க்கு அதிகமானதும் ரூபா 5,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை	ரூபா 3,000
ரூபா 5,000,000க்கு அதிகமானதும் ரூபா 10,000,000க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை	ரூபா 5,000

தலைவர்,
தினைக்களப் பெறுகைக்குழு,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(சி-5118)

31 ஆம் நாள் நினைவில்...

மலர்வு
1929
-
06
-
18

உதிர்வு
2022
-
09
-
17

திரு. கிருஷ்ணா தில்லைநாதன்

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி.**லூசியா சேகரன்** அவர்களது
அன்பு மாமனார் இறையடி சேர்ந்த
31 ஆம் நாள் நினைவு நாளான இன்று
அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
இரங்கலை தெரிவிப்பதுடன் அமரரது
ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

(சி-5114)

உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம், கிளி/இராமநாதபுரம் ம.வி

இராசிபலன்

19.10.2022
ஐப்பசி 02, புதன்கிழமை
நவமி பிற்பகல் 1.25 மணிவரை

பூசம் காலை 8.07 மணிவரை
சுபநேரம்- 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் -12.02-1.32 மணிவரை

சந்திராஷ்டமம்-
உத்தராடம்

வளவன்

மேஷம் வெளியூர் போக்கு வரத்துக்களால் அலைச்சல்கள் ஏற்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும்.

கடகம் கற்பனை மிகுதியான நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், கனிவாகப்பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

துலாம் ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொது வாழ்வில் புகழ் கூடும், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

மகரம் உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பேச்சில் கனிவு பிறக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

ரிஷபம் குடும்பத்தில் கல கலப்பான சூழ்நிலை உருவாகும், நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், அரசு வழியில் அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

சிம்மம் திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

விருச்சிகம் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், எதிர்பார்த்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும்.

கும்பம் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

மிதுனம் உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய நட்பால் பொருளாதார நலனுண்டு, இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு.

கன்னி திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், இயல்பான வாழ்க்கையில இன்பங்கள் கூடும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

தனுசு பயணங்களால் மன உளைச்சல் ஏற்படலாம், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம்.

மீனம் அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரின் அறிவு நிலைக்கு ஏற்ப ஆசை செயற்படும்.

போதைக்கு அடிமையானவர்களுக்காக

யாழ்.நகருக்கு அண்மையில் புனர்வாழ்வு நிலையம்

மாநகர முதல்வர் மணிவண்ணன்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் போதைக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிப்பதற்கு யாழ். நகருக்கு அண்மையில் புனர்வாழ்வு நிலையம் அமைக்க முயற்சி மேற்கொண்டு வருவதாக யாழ்ப்பாண மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

எதிர்கால சந்ததி என கருதப்படுகின்ற எங்களுடைய இளைஞர்கள் யுவதிகளை நோக்கி போதைப்பொருள் வர்த்தகம் மிக வேகமாக நடைபெற்று வருகின்றது. அதற்குள்ளே அறிந்தும் அறியாமலும் அதனுடைய எதிர்கால விளைவுகளைப் பற்றி தெரியாது எமது இளைஞர் யுவதிகள் இந்த போதைப் பொருளுக்குள்ளே அடிமையாகி கொண்டிருக்கின்றமை இந்த மண்ணிலே நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

போதைப்பொருளுக்கு எதிரான செயற்பாட்டினை முன்னெடுப்பதற்கு அனைத்து தரப்பினரையும் ஒருங்கிணைத்து விசேட கூட்டம் ஒன்றினைத்து விரைவில் அந்த செயற்பாட்டினை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளேன்.

போதைக்கு அடிமையான வர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கக் கூடிய விசேட நிலையம் ஒன்றினை யாழ்.நகருக்கு அண்மையில் அமைப்பதற்கு யோசித்து வருகின்றோம். போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை சிறைச்சாலைக்கு அனுப்புவதன் மூலம் அவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்புவதன் மூலம் அவர்களை சமூகத்தோடு ஒருங்கிணைக்க முடியும் என மேலும் தெரிவித்தார். (4)

இளவாலையில் விபத்து இருவர் படுகாயம்

(அராலி)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியவிளான் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில் கீரிமலை, இளவாலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த இருவரும் அவசர நோயாளர் காவு வண்டி மூலம் தெல்லிப்பழை பிரதேச மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதுடன் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை இளவாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-104)

யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையத்தின் 3ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு சமய நிகழ்வும் கேக் வெட்டும் நிகழ்வும் நேற்று பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் இடம்பெற்றது. (படம்:கஜிந்தன்)

யாழ். மாவட்டத்தில் மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பல்வேறு வேலை வாய்ப்புக்களை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு நடைபெறவுள்ளதாக மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகமும் மனிதவலு வேலை வாய்ப்பு திணைக்களமும் இணைந்து மாவட்ட செயலகத்தில், இம்மாதம் ஒக்டோபர் 22 ஆம் திகதி சனிக்கிழமையன்று மாபெரும் தொழிற்சந்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தில் சுமார் பத்தொன்பதாயிரத்து நூற்று நாற்பத்து ஏழு பேருக்கு மேற்பட்ட தொழில் தேடுபவர்கள் பதிவு செய்துள்ளனர்.

அவர்களுக்கு இந்த வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதற்கும் அத்துடன் தொழிற் சந்தைக்குரிய தங்களுடைய கற்கை நெறிகளை பயில ஆர்வம் உள்ளவர்களுக்கு அந்த பயிற்சி நெறியை ஏற்படுத்தும் நோக்கிலும் இந்த தொழிற்சந்தை நிகழ்வு நடைபெறுகிறது.

குறிப்பாக தனியார் உற்பத்தி நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் துறை, ஹோட்டல் துறை, கணக்கியல் துறை ,காப்புறுதித்துறை, ஆடைத் தொழிற்சாலைகள், பாதுகாப்பு சேவை, தாதியர் சேவை மற்றும் வெளி நாட்டு வேலைவாய்ப்புக்கள் போன்ற விடயங்களை உள்ளடக்கி சுமார் 40 இற்கும் மேற்பட்ட தொழிற்துறை நிறுவனங்களும் பயிற்சிநெறி நிறுவனங்களும் பங்கேற்கவுள்ளனர். (4-33)

யூரியா உர விநியோகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கமநலசேவை நிலைய எல்லைக்குட்பட்ட எழுது மட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பைச் சேர்ந்த விவசாயிகளுக்கு நாளை சாவகச்சேரி கமநலசேவை நிலையத்தில் முதற்கட்ட யூரியா உரம் வழங்கி வைக்கப்படும் என கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கமக்கார அமைப்பினர் தெரிவிக்கையில் ஒரு பரப்பிற்கு 300கிராம் என்ற அடிப்படையில் முதற்கட்ட யூரியா உரம் வழங்கி வைக்கப்படும்.

உரத்தினை பெற வரும் விவசாயிகள் ஏக்கர் வரி பற்றுச்சீட்டு,2022ஆம் ஆண்டிற்கான சந்தாப்பண பற்றுச்சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டையுடன் காலை 9 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும் இடையில் கமநலசேவை நிலையத்திற்கு வருகை தந்து உரத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும் என மேலும் தெரிவித்துள்ளனர். (4-30)

அருணலு விருதுகள் வழங்கல் விழா-2022

(யாழ்ப்பாணம்)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2021 மற்றும் 2022 இல் சிறந்து விளங்கிய கொமர் ஷல் வங்கியின் அருணலு சிறார் கணக்கு வைத்திருக்கும் சிறுவர்களுக்கான அருணலு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். கொமர்ஷல் வங்கிக் கிளையில் நடைபெறும். (4)

CIPPCA தெரிவுப் பரீட்சை

பரீட்சார்த்திகளுக்கான அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சி அலகினால் நடத்தப்பட்டு வரும் பெறுகை நடைமுறைகள் மற்றும் ஒப்பந்த நிர்வாகம் தொடர்பான CIPPCA சான்றிதழ் கற்கை நெறிக்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த உத்தியோகத்தர்களுக்குரிய அனுமதி அட்டைகள் அவர்களது அலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் இது வரை கிடைக்கப்பெறாத அலுவலர்கள் Tel-021 739 1252 , Fax-021 228 2006 , E-mail-npmdti@gmail.com என்பவற்றின் ஊடாக தொடர்பு கொள்ளுமாறு முகாமைத்துவ அபிவிருத்திப் பயற்சி அலகின் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

நீர்ப்பம்பி திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரை அண்மித்த தனியார் காணி ஒன்றில் வைக்கப்பட்டிருந்த நீர் இறை க்கும் இயந்திரம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை திருட்டுப் போயிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த காணியில் வேலையில் ஈடுபட்டவர்கள் தேநீர் அருந்த கடைக்குச் சென்ற வேளையில் குறித்த திருட்டு இடம்பெற்றிருப்பதாகத் தெரிவி க்கப்படுகிறது. திருடப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரம் சுமார் நாற்பதாயிரம் ரூபாய் பெறுமதியானது என்பது குறிப்பிடத்தக்கது. (4-30)

பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம் பரிசில் நாள்-2022 நிகழ்வானது நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் நா. கருணாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரனும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண தேசிய கல்வியற் கல்லூரி உபபீடாதிபதி இ. சத்தியேந்திரம் பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர். (4)

கல்விக்கரம் உதவி மையத்தின் அனுசரணையுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்களின் ஒத்துழைப்பில் தாயகமெங்கும் முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் பாவனைக் கெதிரான தொடர் விழிப்புணர்வு பிரச்சாரம் நேற்று யாழ். கொட்டடி பண்ணைப் பகுதியில் இடம்பெற்றது. (படம்- கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல்களைப் பிற்போட உடன்பட மாட்டோம்-மொட்டுக்கட்சி

(கொழும்பு)

தேர்தல்களை பிற்போட உடன்படப் போவதில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செவ்வாய் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், "தேர்தலை முன்கூட்டியே நடத்துமாறு போராடிய கட்சியே எமது கட்சியாகும்.

தேர்தலை கோரி நீதிமன்றத்தைக் கூட நாடினோம். ஜனநாயகமே எமது கட்சியின் பிரதான நோக்கம்.

எனவே தேர்தல்களை பிற்போட உடன் படமாட்டோம். அதனை பிற்போட வேண்டிய தேவையும் எமக்கு கிடையாது. ஏனெனில் வெற்றி என்பது எம் வசமே உள்ளது." எனத் தெரிவித்துள்ளார். (நி)

அமைதியான போராட்டக்காரர்களை பாதுகாக்கும் கடமை சட்டத்திற்கு உள்ளது

ஐ.நா அறிக்கையாளர்

(கொழும்பு)

இலங்கையில் மக்கள் ஒன்று கூடுவதற்கான உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை ஐக்கிய நாடுகள் சபையின் சுதந்திரத்திற்கான விசேட அறிக்கையாளர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் நிலைமைமையை தமது அலுவலகம் உன்னிப்பாக அவதானிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைதியான போராட்டக்காரர்களை பாதுகாக்கும் கடமை சட்ட அமுலாக்கத்திற்கு உள்ளது என்றும் அனைவரும் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க பாதுகாப்பான மற்றும் ஏதுவான சூழலை உருவாக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

11, பண்ணாகம் வீதி, வட்டாரம்-08

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 08 பண்ணாகம் வீதியிலுள்ள இல:11 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் சொந்தக்காரர் என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்தினை தில்லையம்பலம் முருகேசு சின்னையாவும் பெண் மாரிமுத்துவும் ,சின்னையா ஞானசந்திரமூர்த்தியும் சோதிமுத்துவுக்கும் துரையப்பா இராமநாதனுக்கும் இடையில் விவாகம் நிச்சயிக்கப் பட்டிருப்பதனால் குறித்த ஆதனத்தினை சீதனமாகக் கொடுப்பதாக வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு அ.சொக்கலிங்கம் முகதாவில் 427/08.06.1960 ஆம் இலக்கத்தில் சீதன உறுதியொன்றை நிறைவேற்றியுள்ளார்கள். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரம் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

குறித்த இராமநாதன் பெண் சோதிமுத்து சந்ததியின்றி காலஞ்செல்ல குறித்த ஆதனம் அவரின் ஒரேயொரு ஆண் சகோதரரான சின்னையா ஞானசந்திரமூர்த்தி அவருக்கு உரிமையாக வந்தடைந்ததாக வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு வே.த.மு.கதிர்காமநாதன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1511/27.10.2014 ஆம் இலக்க உறுதியால் குறித்த சின்னையா ஞானசந்திரமூர்த்தி ஆகியவரிடமிருந்து ஞானசந்திரமூர்த்தி காந்திஜி ஆகியவர் ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஞானசந்திரமூர்த்தி காந்திஜி ஆகியவர் ஆதனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ஞானசந்திரமூர்த்தி காந்திஜி ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தவிசாளர்/செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை.

(3173)

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை	இவர்களுக்கு மணமகன் தேவை
பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: திருவோணம் 3 கி.பா: சூரி . செவ் 3 இல் உயரம்: 5' 7" தகைமை/தொழில்:A/L (வியாபாரம்) எதிர்பார்ப்பு: படித்த பெண் தொ.இ: B/13058	பிறப்பு: 1995 இந்து நட்சத்திரம்:பூராடம் 2 கி.பா: சூரி 12 செவ் 3 இல் உயரம் : 5' 6" தகைமை/தொழில்:BBM பட்டதாரி எதிர்பார்ப்பு: படித்தவர் வெளிநாடு விரும்பத்தக்கது தொ.இ: G/13048
பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: திருவாதிரை 1 கி.பா: 27 ¾ சூரி 1 செவ் 5 இல் தகைமை/தொழில்: A/L சொந்தத் தொழில் எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் அல்லது வெளிநாடு தொ.இ: B/13059	பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: உத்தரம் 4 கி.பா: சூரி, செவ் 6 இல் தகைமை/தொழில்:BSc, PHT, IT மருத்துவ மனையில் மருத்துவ பரிசோதனை ஒருங்கிணைப்பாளர் (அவுஸ்திரேலியா) எதிர்பார்ப்பு: தகுதியான வரன் தொ.இ: G/13053
பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: பூரட்டாதி 2 கி.பா:சூரி 7 செவ் 6 இல் தகைமை/தொழில்: O/L (வியாபாரம் பிரான்ஸ்) எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண் தொ.இ: B/13060	பிறப்பு:1995 இந்து நட்சத்திரம்: திருவோணம் 2 கி.பா: சூரி 12 செவ் 5 இல் உயரம் :5' 4" தகைமை/தொழில்: HNDA பட்டதாரி எதிர்பார்ப்பு: உள்நாடு ஆயின் அரச உத்தியோகம் வெளிநாடு ஆயின் லண்டன் ,கனடா தொ.இ:G/13057
பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: கேட்டை 1 கி.பா:7 சூரி 9 செவ் 10 இல் தகைமை/தொழில்: Bsc Nursing எதிர்பார்ப்பு: அரசதொழில் தொ.இ: B/13061	பிறப்பு: 1993 கிறிஸ்தவம் RC உயரம்: 5' 4" தகைமை/தொழில்: கல்வியற்கல்லூரி ஆசிரியை எதிர்பார்ப்பு:பட்டதாரி தொ.இ:G/13071

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

best wishes

இராஜரட்ணம் வின்சன்.
(யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)

சுந்தரமூர்த்தி பிரேம்குமார்
(யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி)

திருமதி.பிரியதர்சினி சுகுமார்
(யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியர்களாக பணியாற்றி அதிபர் சேவையில் பதவி உயர்வு பெற்று சென்றமையிட்டும் மென்மேலும் பல பதவி உயர்வு பெற வாழ்த்துகிறோம்.

(C-5113)

ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடினின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் அணு ஆயுத பயிற்சியை ஆரம்பித்த நேட்டோ

(ஐரோப்பா)

மேற்கத்தேய நாடுகளின் இராணுவக் கூட்டமைப்பான நேட்டோ, நீண்ட காலமாக திட்டமிடப்பட்ட வருடாந்த அணு ஆயுதப் பயிற்சிகளை ஆரம்பித்துள்ளது.

வடமேற்கு ஐரோப்பாவில் நேற்று முன்தினம் திங்கட் கிழமை ஆரம்பமான இப்பயிற்சிகள் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

உக்ரைனில் நடந்துவரும் போர் மற்றும் ஜனாதிபதி விளாடிமிர் புடினின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் இந்த பயிற்சிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. எனினும், ரஷ்யப் படையெடுப்புக்கு முன்னதாகவே இந்த பயிற்சி திட்டமிடப்பட்டிருந்தது.

30 நாடுகள் இணைந்துள்ள இந்த இராணுவ ஒத்திகை பயிற்சி மேற்கு ஐரோப்பா, பெல்ஜியம், பிரித்தானியா உள்ளிட்ட வான்வெளி மீது நடைபெறுகின்றது.

இப்பயிற்சியில் மொத்தம் 60 விமானங்கள் வரை பங்கேற்கும்.

நேட்டோ பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க், இந்த பயிற்சியை கைவிட வேண்டும் என்ற கருத்தை நிராகரித்தார்.

போர் வரும் முன்னர், முன்னெச்சரிக்கையாக தடுப்பதே நேட்டோ இராணுவத்தின் வலிமை என்பதால், நாங்கள் விழிப்புடன் இருப்பதாக அவர் விளக்கம் அளித்துள்ளார்.

இதனிடையே ஐரோப்பிய ஒன்றியம் 15,000 உக்ரைனிய வீரர்களுக்கு பயிற்சி அளிக்க உள்ளது. மேலும், ஆயுதங்களுக்காக 500 மில்லியன் யூரோக்களை கூடுதலாக வழங்க உள்ளது. (நி)

சாவகச்சேரி நகராட்சி மன்றம் பொன்விழா மண்டப கேள்வி அறிவித்தல்- 2023

தலைவர், பெறுகைக் குழு, சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் பின்வரும் சேவைகளுக்காக 01.01.2023 தொடக்கம் 31.12.2023 வரையான காலப்பகுதிக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

பெறுகையின் பெயர், இல :-

1. பொன்விழா மண்டப நிகழ்வுகளிற்கு உணவு வழங்குநரை தெரிவு செய்தல் - **NP/14/41(3)/Town Hall/Food Supply/2023**
2. பொன்விழா மண்டப நிகழ்வுகளிற்கு இரண்டு கதலி வாழைக்குலைகளை மரத்துடன் கொண்டுவந்து கட்டுவதற்கான வழங்குநரை தெரிவு செய்தல் - **NP/14/41(3)/Town Hall/Banana/2023**

பெறுகை இல (01) NP/14/41(3)/Town Hall/Food Supply/2023
பொன்விழா மண்டப நிகழ்வுகளிற்கு உணவு வழங்குநரை தெரிவு செய்தல்.

நிபந்தனைகள் :-

1. உணவு வழங்குநர் வியாபாரப்பதிவு செய்திருப்பதுடன் வியாபார உரிமம் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் சமையல் செய்து வழங்கும் பகுதியானது நகராட்சி மன்ற எல்லைக்குள் காணப்படல் வேண்டும்.
2. தாங்கள் உணவு தயாரிக்கும் மற்றும் களஞ்சியப்படுத்தும் இடத்தினை எமது பொது சுகாதார பரிசோதகர் அல்லது எம்மால் அனுமதியளிக்கப்படுகின்ற உத்தியோகத்தர் பார்வையிடுவதற்கு அனுமதியளிக்க வேண்டும்.
3. சமையல் செய்யும் பகுதி மற்றும் சமையல் மேற்கொள்பவர்கள் சுத்தமாக இருப்பதுடன் சமையல் மேற்கொள்பவர்கள் மருத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.
4. தங்களால் வழங்கப்படும் உணவு வகைகள் அனைத்தும் நகராட்சி மன்ற பொதுச் சுகாதார பரிசோதகரின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.
5. தங்களால் தயாரிக்கப்படும் உணவு வகைகள் தொடர்ச்சியாக எப்போதும் சுவைமிக்கதாகவும் தரமுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.
6. எங்கள் பணிப்பிற்கிணங்க எந்த உணவு வகைகளும் வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
7. உரிய நேரத்திற்கு உணவு வகைகள் யாவும் தயாரித்து வழங்குதல் வேண்டும்.
8. தொழிற் தகைமை மற்றும் அனுபவச்சான்றிதழ்கள் இணைக்கப்படல் வேண்டும்.
9. தங்களிற்கு எமது மன்றத்தினால் வழங்கப்படும் உணவுக்கான கொடுப்பனவுத் தொகையிலிருந்து 12.5% தரகுப் பணமாக எம்மால் அறவிடப்படும்.
10. தாங்கள் பொன்விழா மண்டப நிகழ்வு ஏற்பாட்டாளர்களுடன் நிகழ்விற்கு உணவு வழங்குதல் தொடர்பாக நகராட்சி மன்றத்தினூடாக மட்டுமே தொடர்புகளை மேற்கொள்வதுடன் எம்மால் குறிப்பிடப்படும் உணவுவகைகள் மற்றும் அளவுகள் மட்டுமே விநியோகம் செய்தல் வேண்டும்.

பெறுகை இல (02) NP/14/41(3)/Town Hall/Banana/2023
பொன்விழா மண்டப நிகழ்வுகளிற்கு இரண்டு கதலி வாழைக்குலைகளை மரத்துடன் கொண்டுவந்து கட்டுவதற்கான வழங்குநரை தெரிவு செய்தல்

நிபந்தனைகள் :-

1. எங்கள் பணிப்பிற்கிணங்க எந்த தினத்திலும் சேவை வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
2. உரிய நிகழ்வன்று அதிகாலை 06:00 மணிக்கு முன்னதாக அல்லது குறிப்பிடப்படும் நேரத்தில் மரத்துடன் கூடிய இரண்டு கதலி வாழைக்குலை கட்டப்படுதல் வேண்டும்.
3. வாழைக்குலைகள் 25Kg – 30Kg எடை கொண்டதாகவும் பழமாகவும் இருத்தல் வேண்டும்.
4. தங்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுத் தொகையிலிருந்து 12.5% தரகுப் பணமாக எம்மால் அறவிடப்படும்.

குறிப்பு :-

1. சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் வழங்கப்படும் கேள்வி பத்திரங்களை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கூறுவிலைப் பத்திரங்களை 19.10.2022 ஆம் திகதி மு.ப 09:30 இலிருந்து 09.11.2022 திகதி பி.ப 02:30 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூ 1,000.00 இனைச் செலுத்தி அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நகராட்சி மன்றத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.
3. கூறுவிலைகள் 10.11.2022 பி.ப 03.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பலாம். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கூறுவிலைப் பெட்டியில் இடப்படுதல் வேண்டும்.
4. கூறுவிலை உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகை இலக்கம் எழுதப்படல் வேண்டும்.
5. கூறுவிலைகள் 10.11.2022 பி.ப 03.00 மணிக்குத் திறக்கப்படும். அத்தருணம் வழங்குநரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
6. தெரிவு செய்யப்படும் வழங்குநர்கள் சபையுடன் உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்ள வேண்டும்.
7. கேள்வி தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை நகராட்சிமன்ற பெறுகைக்குழுவுக்கே உரியது.
8. மேலதிக விவரங்களுக்கு நேரடியாகவோ அல்லது தொ.பே.இலக்கம் 021-2270963 மூலமோ தொடர்பு கொள்ளவும்.

(சி-5116)

திருமதி.சிவமங்கை இராமநாதன்,
தவிசாளர் ,நகராட்சி மன்றம்,சாவகச்சேரி.
19.10.2022

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அடுக்குமாடிக் கட்டடத்தில் மோதி விபத்திற்குள்ளான போர் விமானம்

(மொஸ்கோ)

போர் விமானம் ஒன்று, ரஷ்யாவின் ஜஸ்க் நகர அடுக்குமாடி குடியிருப்பு கட்டடத்தின் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

ரஷ்யாவின் தெற்கு பகுதியில் அமைந்திருக்கும் ஜஸ்க் நகரில், ரஷ்யப் போர் விமானம் ஒன்று மோதி பெரும் விபத்து ஏற்பட்டுள்ளது.

விமானம் மோதிய அடுக்கு மாடி குடியிருப்புகள் புகை மண்டலமாக காட்சியளிப்பதால் அப் பிராந்தியத்தின் கவர்னர் உறுதிப்படுத்தியுள்ளார்.

தற்போது, ரஷ்யா, உக்ரைன் மீது போர்த் தாக்குதல் தொடுத்து வரும் இந்தச் சூழலில், இந்தப் போர் விமான விபத்தானது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் விபத்தில் எத்தனை பேர் காயமடைந்துள்ளார்கள் என்பது குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை. (நி)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி ரூபா	மருதனார்மடம் ரூபா	சாவகச்சேரி ரூபா	கிளிநொச்சி ரூபா
கத்தரிக்காய்	200	200	180	250
உருளைக்கிழங்கு	200	210	200	200
பச்சைமிளகாய்	240	200	250	250
தக்காளி	300	300	320	350
மரவள்ளிக்கிழங்கு	250	180	220	200
கோவா	280	280	280	260
கரட்	250	360	380	450
பூசணி	180	180	180	200
புடோல்	200	200	140	200
வாழைக்காய்	180	160	120	160
சின்ன வெங்காயம்	450	420	200-500	550
பெரிய வெங்காயம்	260	240	230	280
பாகற்காய்	800	600	500	700
வெண்டிக்காய்	200	200	140	200
கருணைக் கிழங்கு	180	150	170	200
பயற்றங்காய்	400	400	300	350
லீக்ஸ்	350	280	280	350
பீற்றூட்	260	250	230	280
கறிமிளகாய்	550	650	600	600
முருங்கைக்காய்	800	600	600	600
போஞ்சி	280	400	350	400
கத்தரிதம்புள்ள	150	150	---	200
கீரை - 1 பிடி	80	60	100	120
தேசிக்காய்	600	600	600	600
தேங்காய் (ஒன்று)	90	85	40-80	50-70
இராசவள்ளி	250	250	200	250
வெங்காயப்பூ	450	400	---	400
முள்ளங்கி	80	160	140	200
பொன்னாங்காணி	80	100	100	60
வல்லாரை	30	20	40	40
ஈரப்பலா	120	140	100	120

வாரம் ஒரு பாற்பானைத்து மூலிகை

கடுக்காய்

Botanical Name-
Terminalia chebula
Family- Combretaceae

இது ஒரு மர இனத்தைச் சேர்ந்தது. இம் மரத்திலிருந்து பெறப்படும் உலர் கனியே கடுக்காய் எனப்படும்.

மலைகளிலும் காடுகளிலும் வரண்ட நிலங்களிலும் வளரும் இயல்புடையது. வடமாகாணத்தில் இதன் பரம்பல் ஆங்காங்கு காணப்படுகிறது. இதனுடைய உலர் கனி முட்டை வடிவானது. புறத்தில் 5 விளிம்புகளை உடையது. 1.5X1 அங்குலம் உயர அகலமானது.

ஆயுள் மறை நூல்களில் பல இன கடுக்காய்கள் பற்றி குறிப்பிட்டு இருப்பினும் இவை ஒரு மரத்திலிருந்து பெறப்படுபவை. ஆனால் வெவ்வேறு பிரதேசங்களில் வளரும் மரங்களிலிருந்து பெறப்படுபவை ஆகும். வடமாகாணத்திலுள்ள காடுகளிலும் மற்றும் உலர் பிரதேசங்களிலும் வளரும் கடுக்காய் மரங்களில் விளைச்சல் அதிகம்.

இது ஐந்து வரிகளைக் கொண்ட கடுக்காய் ஆகும். இதுவும் மருத்துவப் பண்புகள் நிறைந்ததே.

கடுக்காயுந் தாயுங் கருதிலொன்றென்றாலுங் கடுக்காயுங் தாய்க்கதிகங் காணீ.

கடுக்காயும்தாயும்ஒன்றென ஒருவாறு நினைத்தாலும் அந்தக் கடுக்காயே அத்தாயை பார்க்கிலும் சிறப்பானதாகும்.

ஏனெனில் இக் கடுக்காயானது செரித்தலுக்கு மூலமாகிய இரப்பை, குடல் முதலியவற்றிலுள்ள நோய்களை நீக்கி உணவு வகைகளை முறைப்படி செரிக்கச் செய்து நல்ல இரத்தமுண்டாக்கி உடல் வளர்ச்சி, உடல் நலம் முதலியவற்றுக்கு ஏதுவாகும்.

கடுக்காயில் இனிப்பு, புளிப்பு, கசப்பு, துவர்ப்பு, சார்ப்பு ஆகிய ஐந்து வகை சுவைகளும் காணப்பட்டாலும் உப்பு வகைச் சுவை மாத்திரமில்லை.

இதன் அற்புதம் உவர்ப்பானது கண்நோய், தசைப் பெருக்கத்துக்கும் இரத்த பெருக்கத்துக்கும் விரோதம் செய்யத்தகாது. கடுக்காயோ கண்நோய்க்கு சஞ்சீவிக்கு ஒப்பானது. பொதுவாக எல்லா நோய்களுக்கும் கடுக்காய் முக்கியமானது. கடுக்காய் மரத்தின் பிஞ்சு, உலர் கனி, புற்று யாவும் மருத்துவக் குணங்கள் நிறைந்ததே.

காலநிலை மாற்றத்தை கருத்தில் கொண்டு கடுக்காயை பாகப்படுத்தி உண்டு வர பருவகால மாற்றங்களால் உடலில் ஏற்படும் பற்பல நோய்களிலிருந்து விடுவித்துக் கொள்ள முடியும். உதாரணமாக புரட்டாதி மாத நடுப்பகுதியிலிருந்து கார்த்திகை மாத நடுப்பகுதி வரை கடுக்காய்த்தூள் 1-2 கிராமை கற்கண்டுத்தூள் 2 கிராமுடன் உட்கொண்டு வந்தால் பித்த நோய்கள் தணியும். உடல் சூடு, வெள்ளை சாய்தல் போன்ற நோய்களும் தணியும்.

கார்த்திகை மாத மையப்பகுதியிலிருந்து தை மாத நடுப்பகுதி வரை கடுக்காய்த்தூள் ஒரு கிராமை சுக்குத்தூள் ஒரு கிராமுடன் கலந்து உட்கொண்டு வந்தால் பித்த சமநிலை பேணப்படும். தை மாத நடுப்பகுதியில் இருந்து பங்குனி மாத நடுப்பகுதி வரை கடுக்காய்த்தூள் 1-2 கிராமை அரிசி திப்பிலித்தூள் 2 கிராமுடன் உட்கொண்டால் கபம் அதிகரிக்காமல் தடுக்கப்படும்.

மே மாத நடுப்பகுதியில் இருந்து ஆடி மாத மையப்பகுதி வரையில் வெல்லத்துடன் சாப்பட்டால் அதிகரித்த வாதம் தன்னிலைப்படும்.

ஆடிமாத மையப்பகுதியிலிலிருந்து புரட்டாதி மாத மத்தி வரையில் உப்புடன் (சிறிது) சாப்பிட்டால் பித்தம் அதிகரிப்பதைத் தடுக்கும். குறைந்தது 14 நாட்கள் மேற்படி முறையே சாப்பிட வேண்டும். இப்படிச் செய்வதால் உடல்நலம் நிலைத்திருக்கும். வேறு நோய்கள் உண்டாக மாட்டாது.

வாத, பித்த, கப உயிர்த்தாதுகள் சமநிலையில் காணப்படும். கழிவுத்தொகுதி முதலிய உறுப்புக்களில் தொழில் முறைப்பட்டு வரும்.

விதை நீக்கி எடுத்து இடித்த கடுக்காய்த்தூள் 700 கிராம், பசுநெய்2800 கிராம் இரண்டையும் கலந்து பீங்கான் சாடியில் போட்டு வெயிலில் வைத்து வர வேண்டும். மண், தூசு விழாத படி சாடியின் வாய்க்கு மெல்லிய துணியால் மூடிக்கட்டி வைக்க வேண்டும்.

இவ்விதம் நாற்பது நாட்கள் சென்ற பின்பு துணியில் அரித்து திப்பி நீக்கிய பின்பு உபயோகிக்கலாம். 4-8 கிராம் அளவு காலை ஒரு வேளை மட்டும் சாப்பிட்டு வரவேண்டும். இதனால் மலக்கட்டு, குடற்புழுக்கள், குண்மம் (வயிற்றுப்புண்), தோல் நோய்கள் நீங்கும்.

கடுக்காய், சுப்பு, வெண் தாமரை பூ இதழ்கள், ஏலக்காய் ஒவ்வொன்றையும் 100 கிராம் எடுத்து பொடி செய்து கொள்ளவும். தினமும் 2 கிராம் பொடியை வெந்நீரில் சாப்பிட்டு வர இரத்த அழுத்த நோய் குணமாகும்.

கடுக்காய், மருதம்பட்டை, ஆவாரம்பூ ஒவ்வொன்றும் 200 கிராம் எடுத்து அரைத்துக் கொள்ளவும். இதில் ஐந்து கிராம் அளவு

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

200 மில்லி வெந்நீரில் போட்டு குடிநீராக்கி குடித்தால் தடைப்பட்ட மாதவிலக்கு சரியாகும். இரத்தப்போக்கு உடனே நிற்கும்.

கடுக்காய்த் தூளை நுண்ணிய பொடியாக்கி பல் துலக்க பல் இறுகும். முரசிலிருந்து இரத்தம் வடிதல் நிற்கும். மலக்கட்டு உள்ளவர்கள் கடுக்காயைப் பொடித்து 1 1/2 தேய்க்கரண்டி அளவு எடுத்து 200 மில்லி வெந்நீரில் 2 மணி நேரம் ஊற வைத்து இரவில் அருந்த அதிகாலையில் மலம் இழகி வெளியேறும்.

வீடுகள் தோறும் அஞ்சறைப் பெட்டியில் கடுக்காய் வைத்திருத்தல் அவசியமாகும். உடல் கட்டுக்களுக்கு வன்மை தந்து முதுமை வரவொட்டமெற் செய்யும். அன்றியும் வாழ்நாள் பெருக்கையும் அறிவையும் ஆற்றலையும் தரும். ஆகவே கடுக்காய் காய கற்ப மூலிகையாக கருதப்படுகிறது.

சமனான ஊட்டச்சத்தான உணவுக்கான தேவை

(சென்ற வார தொடர்ச்சி)

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

எமது நாட்டின் அண்மைக்கால தரவுகள் தென்னாசியாவிலேயே அதிகரித்த ஊட்டச்சத்து குறைபாடுள்ள 5 வயதுக்கு குறைவான குழந்தைகளைக் கொண்டு இரண்டாம் நிலையிலுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதிலும் 17 சதவீதமான குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் அதிகம் பாதிக்கப்பட்டவர்களாக காணப்படுகின்றனர் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இவை தவிர வயது வந்த பெண்கள் ஊட்டச்சத்து குறைபாட்டால் மீண்டும் பாதிக்கப்பட்டிருப்பதாக புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. 2000 ஆண்டளவில் கிட்டத்தட்ட 40 சதவீதமாக இருந்த ஊட்டச்சத்து குறைபாடு கணிசமான அளவு 2010 ஆம் ஆண்டளவில் 30 சதவீதமாக குறைந்து தற்போது மீண்டும் 37 சதவீத புள்ளிநிலையை அடையும் நிலைக்கு வந்திருக்கின்றது.

இதற்கு அவர்களின் மனைப்பொருளாதாரத்தின் நிதி நிலைமை முக்கியமான காரணமாக முன் வைக்கப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடி நிலை விரைந்து தீர்க்கப்படக்கூடியதொன்றல்ல என்பதனால் பெண்களின் குறிப்பாக தாய்மையடையும் பெண்களின் ஊட்டச்சத்து நிலையில் முன்னேற்றம் காணவேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

எதிர்பார்த்திருக்கும் வழிவகைகள் அனைத்தும் சாதகமான நிலையில் எமக்கு இல்லையென்பதனை புரிந்து கொண்டால் இவர்களுக்கான சமனான ஊட்டச்சத்தான உணவை பெறுவதற்கான வழிவகைகளையும் அவர்களுக்கான அன்றாடம் அவசியத் தேவைக்கான பணத்தை பெறுவதற்கான வழிவகைகளையும் அவர்களாகவே பெறுவதற்கான செய்ற்றிட்டமாகவே மனைத்தோட்டத்தை பரிந்துரைத் திருக்கின்றனர். கிராம சந்தைகளை உருவாக்கினால் தமது மனையில் பெறும் உணவில் மேலதிகமானதை சிறியளவிலேனும் விற்பதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தி அவர்களுக்கான வருமானத்தை பெருக்கும் வழிமுறைக்கு

இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

அந்தந்தப் பகுதியின் பொறுப்பு வாய்ந்த மக்கள் நல சேவையாளர்கள் வித்திட வேண்டும்.

கொவிட்-19 ஐ கடந்து தற்போது கோஸ்ட்டா-2 என்னும் புதிய தொற்று நோய் பரவக்கூடிய வாய்ப்புக்கள் பற்றி விவாதிக்கும் இந்நேரத்தில் கொவிட்-19 இல் பெற்ற அனுபவத்தை பாடமாக்கி இன்னொரு நுண்ணங்கித்தாக்கம் பெரிதாக உணரப்படுவதற்கு முன்னதாக உணவுற்பத்தியை பெருக்கி அதில் தேவையான ஊட்டச்சத்தினை அனைவரும் குறிப்பாக பெண்களும் குழந்தைகளும் பெறுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தியாக வேண்டும். வருமுன் காப்போம் என்னும் மகுடவாசகத்தை நாம் மீண்டும் மீட்டிப்பார்க்கவேண்டிய இத் தருணத்தை சரியான வழியில் பயன்படுத்திக்கொள்வோமானால் எமது மக்களை மீண்டும் ஏற்படக்கூடிய நுண்ணங்கி மற்றும் வேறெந்த வகையான பேரிடரிலிருந்தும் காப்பாற்றிக் கொள்ளமுடியும். எமது உடலில் தேவையான நோயெதிர்ப்பு சக்தியை இயற்கையாக நாம் ஏற்படுத்திக் கொண்டால் இவ்வாறான பேரிடர்களிலிருந்து எம்மை

பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

காப்பாற்றிக் கொள்ள முடியும்.

எமக்கான சமனான ஊட்டச்சத்தான உணவை நாம் அனைவரும் இணைந்து உற்பத்தி செய்வதற்கான செயல்முறையை முனைப்புடன் முடுக்கி விட வேண்டியதன் அவசியம் இங்கே சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. எம்மால் எதுவும் முடியும் என்னும் தாரக மந்திரத்தை அனைவரினதும் காதுகளில் தொடர்ந்து ஒலிக்கச் செய்து அனைவரையும் ஒன்றிணைத்து இக்கட்டான இச் சூழ்நிலைகளிலிருந்து விடுபடுவோம்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டாக்காலி கால்நடைகளால் பொதுமக்கள் பெரும் அசௌகரியம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாங்குளம் வெள்ளாங்குளம் பிரதான வீதியில் இரவு பகல் வேளைகளில் கால்நடைகளின் நடமாட்டத்தால் வாகன சாரதிகள், பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதுடன் அடிக்கடி விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன.

அதாவது மாங்குளம் வன்னி விளாங்குளம், மல்லாவி, துணுக்காய், கல்விளான். சேவாலங்கா கிராமம், வெள்ளாங்குளம் ஆகிய பகுதிகளில் கட்டாக்காலிகளாக விடப்பட்டுள்ள கால்நடைகள் இரவு வேளைகளிலும் பகல் வேளைகளிலும் வீதிகளில் காணப்படுகின்றன.

இவ்வாறு வீதியில் கட்டாக் காலிக் கால்நடைகள் காணப்படுவதுடன் வீதியால் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பயணிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் கொள்வதுடன் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெறுவதுடன் கட்டாக்காலி கால்நடைகளால் ஏற்படும் விபத்துக்களால் பெருமளவானோர் காயமடைவதுடன் உயிரிழப்புக்கள் கூட இடம் பெற்றுள்ளன.

எனவே இவ்வாறு கட்டாக் காலிகளாக வீதியில் காணப்படும் கால்நடைகளை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நட வடிக்கை எடுக்க வேண்டும் எனப் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-315)

சாவகச்சேரி நகராட்சி மன்றம்
2023 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்ற அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் பொதுச்சந்தை, கருவாட்டுக் கடை இறைச்சிக் கடைகளை 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப் பத்திரங்கள் கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணமும் செலுத்தி நகராட்சி மன்ற அலுவலகத்தில் 19.10.2022 - 09.11.2022 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப 9.30 - பி.ப 2.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
கேள்விப்பத்திரங்களை பெறுபவர் **தமது தேசிய அடையாள அட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கிராமசேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும்** கொண்டு வருதல் வேண்டும்.
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி :- 10.11.2022 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 02.30 மணி
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 10.11.2022 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 02.30 மணி

02. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **தவிசாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். **10.11.2022 பிற்பகல் 02.30** மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இதன் இணைப்பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்.** என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

03. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு.

04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக பட்டியலிடப்பட்டவர்களுக்கு கேள்விப் படிவம் வழங்கப்படமாட்டாது என்பதுடன் படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

05. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.

06. கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் கேள்விகாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

07. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதத் திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.

08. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2023 ஆம் ஆண்டு பொதுச்சந்தை, இறைச்சிக்கடைகள் கருவாட்டுக் கடைக்கான குத்தகை அட்டவணை

இல	குத்தகை விபரம் (01.01.2023 – 31.12.2023)	ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதர்வரிகள் தவிர)	கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது)	கேள்விப்படிவக் கட்டணம் (இதர வரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது)
01	சாவகச்சேரி பொதுச் சந்தை (மரக்கறிச் சந்தை, மீன்சந்தை, வாகன தரிப்பிடம் உள்ளடங்கலாக)	11,003,411.10	110,000.00	1,000.00
02	கருவாட்டுக் கடை இல : 01	119,570.00	1,500.00	1,000.00
03	ஆட்டிறைச்சிக் கடை இல : 01	400,631.00	4,500.00	1,000.00
04	மாட்டிறைச்சிக் கடை இல : 01	1,716,550.50	17,500.00	1,000.00
05	மாட்டிறைச்சிக் கடை இல : 02	1,716,550.50	17,500.00	1,000.00
06	கோழி இறைச்சிக் கடை இல : 01	1,357,500.00	15,000.00	1,000.00
07	கோழி இறைச்சிக் கடை இல : 02	1,357,500.00	15,000.00	1,000.00

குறிப்பு: இந்நகராட்சி மன்றத்தின் பொதுச் சந்தை, இறைச்சிக்கடை, கருவாட்டுக் கடையிலிருந்து 1/2 Km சுற்று வட்டத்திற்குள் தனியார் எவரும் மரக்கறி, இறைச்சி, கருவாடு என்பன விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

திருமதி. சிவமங்கை இராமநாதன்,
தவிசாளர்,
நகராட்சி மன்றம், சாவகச்சேரி. (C-5115) 19.10.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு சிவபூமி நிலைய திறப்பு விழா நாளை

(கொழும்பு)

கொழும்பு சிவபூமி நிலைய திறப்பு விழாவானது நாளை முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணி வரை இல 34, ஹக் வீதி, பம்பலப்பிட்டியில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர். கலாநிதி. ஆறு. திருமுருகன் தலைமையில் நடை பெறவுள்ளது. (4)

மணல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று சந்தேக நபர்கள் கைது

(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம் பொக்கணை மற்றும் தருமபுரம் பகுதிகளில் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட சந்தேக நபர்களினை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு நேற்று முன்தினம் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே குறித்த கைது நடவடிக்கை இடம் பெற்றதுடன் மணல் அகழ்வுக்கு பயன்படுத்திய 2 டிப்பர்கள், 1 உழவு இயந்திரம் ஒன்றும் தருமபுர பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

பொலிஸ் விசாரணைகளின் பின்னர் கைது செய்யப் பட்டவர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.சது ரங்க தெரிவித்துள்ளார். (4-316)

வவுனிக்குளத்தின் கீழ் இவ்வாண்டு 6060 ஏக்கரில் பெரும் போகம்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத் தின் பாரிய நீர்ப்பாசன குள மான வவுனிக்குளத்தின் கீழ் வழமை போன்று இவ்வருடத்திலும் 6060 ஏக்கர் நிலப்பரப்பில் 2260 விவசாயிகள் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள வுள்ளனர்.

இடதுகரை வலதுகரை மத்திய துலுசு ஆகிய பிரதான நீர்விநியோக வாய்க்கால்களின் கீழ் உள்ள நெற்செய்கை நிலங்களில் எழுபது வீதமான இரா சயன உரங் களையும் முப்பது வீதமான சேதன உரங்களையும் பயன்படுத்தி இம்முறை கால போக செய்கை மேற்கொள்வது தொடர்பிலான தீர்மானங்கள் எடுக்கப் பட்டுள்ளன.

பயிர்ச்செய்கை காலங்களில் பண்ணையாளர்கள் கால் நடைகளைப் பட்டி அடைத்துப் பராமரிக்கும்படி கால்நடை பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தப்ப ட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-315)

முகநூல் தரிசனம் 104

ஒருவனது பலவீனமே அவனது பலம்

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த பத்து வயதுச் சிறுவனுக்கு ஜூடோ சம்பியனாக வேண்டும் என்பது கனவு. ஆனால், அவனுக்கு இடது கை கிடை யாது. கையும் காலும் வலுவாய் இருப்பவர்களுக்கே ஜூடோ சாம்பியன் ஆவது சிம்ம சொப்பனம். கையி ல்லாத சிறுவன் என்ன செய்வான்? பல மாஸ்டர்களிடம் போனான். எல் லோரும் அவனை பரிதாபமாய்ப் பார்த்துவிட்டு திருப்பி அனுப்பி விட்டார்கள். கடைசியில் ஒரு குரு அவனுக்கு ஜூடோ கற்றுத் தர ஒப்புக் கொண்டார்.

பயிற்சி ஆரம்பமானது. குரு ஒரே ஒரு தாக்குதலை மட்டுமே அவனுக்குக் கற்றுக் கொடுத்தார். பல மாதங்கள் ஓடின. குரு வேறு எதையும் கற்றுக் கொடுப்பதாகத் தெரியவில்லை. சிறுவன் சோர்ந்து போய் "குருவே.. ஜூடோ சம்பியன் ஆக இந்த ஒரு தாக்குதல் தெரிந்தால் மட்டும் போதாதே. வேறு எதுவும் சொல்லித் தருவீர்களா?" என்றான்.

"இந்த ஒரே ஒரு தாக்குதலில் நீ வல்லவன் ஆனால் போதும்" என்றார் குரு. குரு சொல்லிவிட்டால் மறு பேச்சு ஏது? சிறுவனும் பயிற்சியைத் தொடர்ந்தான். சம்பியன்களுக்கான போட்டியும் ஆரம்பமானது. முதல் போட்டியில் குறித்த சிறுவன் எல்லோரும் ஆச்சரியப்படும் விதமாக வெற்றி பெற்றான்.

இரண்டாவது சுற்றுப் போட்டியிலும் வெற்றி பெற்று அப்படியே முன்னேறி அரை இறுதிப் போட்டியில் போராடி ஜெயித்து இறுதிப் போட்டிக்கு தெரிவானான். இறுதிச் சுற்றுப் போட்டியில் எதிரே இருப்பவன் பலமுறை சம்பியன் பட்டம் பெற்றவன். ஒரு கை இல்லாத எதிராளியைப் பார்த்து அவனுக்கு கொஞ்சம் பரிதாபமும் இளக்காரமும். சிறுவன் சளைக்கவில்லை. போட்டி ஆரம்பமானது. முதல் சுற்றில் சிறுவனை அடித்து வீழ்த்திய நிலையைக் கண்டு பார்வையாளர்களுக்கு அதிர்ச்சி. போட்டியை நிறுத்திவிடலாமா? என்கின்றனர் போட்டி நடத்துபவர்கள். "வேண்டாம் சிறுவன் சண்டையிடட்டும்" என்கிறார் குரு.

குறித்த சிறுவனோடு மோத இனிமேல் பாதுகாப்புக் கவசம் தேவையில்லை என எதிராளி அலட்சியமாய் மோத அந்தச் சிறுவன் தனக்குத் தெரிந்த ஒரே ஒரு தாக்குதலை எதிராளி மீது பலமாய் நிகழ்த்த குறித்த எதிராளி வீழ்ந்தான். பார்வையாளர்களுக்கும் போட்டியாளர்களுக்கும் ஆச்சரியம். அந்தச் சிறுவனுக்கோ தான் சம்பியன் ஆனதை நம்ப முடியவில்லை. அன்று மாலை குருவின் பாதங்களில் பணிந்த அவன் கேட்டான்.

"குருவே. நான் எப்படி இந்த போட்டியில் வெற்றி பெற்றேன்? ஒரே ஒரு தாக்குதலை மட்டும் வைத்துக் கொண்டு வெற்றி பெற்றிருக்கிறேனே" என்றான். புன்னகைத்தபடியே குரு சொன்னார் "உனது வெற்றிக்கு இரண்டு காரணங்கள். ஒன்று ஜூடோவிலுள்ள மிகக் கடுமையான ஒரு தாக்குதலை நீ கற்றுத் தேர்ந்திருக்கிறாய். இரண்டாவது இந்தத் தாக்குதலைத் தடுக்க வேண்டுமானால் எதிராளிக்கு ஒரே ஒரு வழி தான் உண்டு. உனது இடது கையைப் பிடிக்க வேண்டும். உனக்குத் தான் இடது கை கிடையாதே! உன்னுடைய அந்த பலவீனம் தான் பலமானதாய் மாறி உன்னை சம்பியனாய் ஆக்கியிருக்கிறது!" என குரு சொன்னார். தனது பலவீனமே பலமாய் மாறிய அதிச யத்தை நினைத்து நினைத்து சந்தோசமடைந்தான்.

நமது மனம் திறமைக ளின் கடல். அதில் முத்தெ டுப்பதும் நத்தையெடுப்பதும் மூச்சடக்கி நாம் மூழ்குவ தைப் பொறுத்தது. ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கை தனித் தனித் திற மைகளைக் கொடுத்திருக்கிறது. நமக்குள்ள திறமை யைப் பயன்படுத்தி தோல்வி யைப் பற்றி அஞ்சாது தொடர் ந்து முன்னேறுவோம்.

LAKUL (K) RAGUL

பாடசாலைகளுக்குள் ரொபி மூலம் போதைப்பொருள் விநியோகம்

அதிர்ச்சித் தகவலை வெளியிட்ட அமைச்சர்

(கொழும்பு)

நாட்டில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகிறது. அதிலும் இனி ப்பு, ரொபி போன்ற வடிவங்களிலும் போதைப்பொருள் பாடசாலை வளாகங்க ளுக்குள் நுழைவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவி த்தார்.

நாட்டில் போதைப்பொருள் பாவனை வெகுவாக அதிகரித் துள்ளது. பெயர் அறியப்படாத பல்வேறு போதைப்பொருட்கள் தற்போது புழக்கத்தில் உள்ள தாக அறிகின்றோம். இவற்றை கட்டுப்படுத்துவதற்கு நாம் பல் வேறு நடவடிக்கைகளை எடுத் துள்ளோம் .

அதிலும் பாடசாலை மாண வர்கள் போதைக்கு அடிமை யாகி வருகின்றனர். பாடசாலை வளாகத்துக்குள் இனிப்பு, ரொபி போன்ற வடிவில் போதைப்பொ ருள் உள்நுழைவதாக தெரிய வந்துள்ளது. ஆகவே பாடசா லைகளில் சோதனை நடவடி க்கைகளை முன்னெடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (நி)

உலகப் பணவீக்க பட்டியல்

மூன்றாம் இடத்தில் இருந்த இலங்கை 5ஆம் இடத்தை நோக்கி வளர்ச்சியடைந்தது

(கொழும்பு)

உலகப் பணவீக்க பட்டிய லில் மூன்றாம் இடத்தில் இரு ந்த இலங்கை தற்போது 5ஆம் இடத்தைப் பிடித்துள்ளது என ஜோன் ஹோப்கின்ஸ் பல்கலை க்கழக பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹென்கேயின் தெரிவி த்தார்.

உலகிலேயே அதிக பணவீ க்கம் உள்ள நாடாக சிம்பாவே கருதப்படுகிறது. அதைத் தொட ர்ந்து கியூபா, வெனிசுலா, துரு க்கி காணப்படுவதோடு இல ங்கை ஐந்தாவது இடத்திலும் உள்ளது.

இதற்கு முன்னர் பணவீ க்கம் அதிகம் உள்ள பட்டியலில் முதலாம், மூன்றாம் இடங் இருந்த இலங்கை தற்போது 5ஆம் இடத்தை நோக்கி வளர் ச்சியடைந்துள்ளமை குறிப்பிட த்தக்கது.

விரைவில் இலங்கையின் பணவீக்கத்தை கட்டுப்பாட்டு க்குள் கொண்டு வரமுடியும் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க அண்மை யில் தெரிவித்திருந்தமை சுட் டிக்காட்டத்தக்கது. (நி)

பெற்றோலிய வளங்கள்

தனியாருக்கு வழங்குவதை கண்டித்து தலைநகரில் போராட்டம் முன்னெடுப்பு

(கொழும்பு)

பெற்றோலிய வளங்களை தனியாருக்கு வழங்கும் அல் லது விற்கும் செயற்பாட்டை உடன் நிறுத்துமாறு கோரி பாராளுமன்றத்திற்கு அரு கில் நேற்றுக் காலை போரா ட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மசகு எண்ணெய் இறக்கும தி்க்கு டொலர் வழங்கு, பெற் றோலிய உற்பத்திப் பொருட் களை தனியார் மயமக்கவோ , வெளிநாட்டவர்க்கோ கொடுக்க முயற்சி செய்யாதே இது எமது வளம் உள்ளிட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் விசேட சட்டமூலத் தினை மீளப் பெற வேண்டும், தனியார் மயமாக்கல் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என ஆர்ப்பாட்டத்தை முன்னெ டுத்தவர்கள் எச்சரிக்கை விடுத் தனர். (நி)

அத்தியாவசிய சேவை விதிமுறைகளை மீறினால் சட்ட நடவடிக்கை

எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர

(கொழும்பு)

அத்தியாவசிய சேவை விதி முறைகளை மீறும் எந்த வொரு ஊழியர் அல்லது தொழி ற்சங்கத்திற்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய சேவைகள் ஆறு மாதங்களுக்கு முன்பே அத்தியாவசியமானதாக அறி விக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இல ங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் முழுமையான தடயவியல் தணிக்கைக்கு எதி ராக பாரிய தொழிற்சங்க நடவடி க்கையை முன்னெடுக்க பல பெற்றோலிய தொழிற்சங்கங் கள் தீர்மானித்துள்ளன.

எனவே, சேவையில் ஏற்ப டும் இடையூறுகளுக்கு உடன டியாக சட்ட நடவடிக்கை எடு க்க அறிவுறுத்திய அமைச்சர், அவர்களுக்கு எதிராக ஒழுக் காற்று நடவடிக்கை எடுப்ப தாகவும் உறுதியளித்துள் ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 05

வீரத்தில் வேலனையும் அழகில் மன்மதனையும் நிகர்த்த பராந்தக சுந்தர சோழ மகாராஜாவை நேருக்கு நேர் காணப்போகிறான். அவ்வளவு தானா? அவருடைய செல்வப் புதல்வி ஒப்புயர்வில்லாத நாரீமணி குந்தவைப் பிராட்டியையும் காணப் போகிறான்.

ஆனால் வழியில் தடை எதுவும் நேராமல் இருக்க வேண்டும். எந்தத் தடை நேர்ந்தால் தான் என்ன? கையிலே வேல் இருக்கிறது. இடையில் தொங்கிய உறையிலே வாள் இருக்கிறது; மார்பிலே கவசம் இருக்கிறது; நெஞ்சிலே உரமிருக்கிறது. ஆனால் மகாதண்டநாயகர், இளவரசர் ஆதித்தர், ஒரு பெரிய முட்டுக்கட்டை போட்டிருக்கிறார்; ஒப்புவித்த காரியத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு யார்ரிடமும் சண்டை பிடிக்கக் கூடாதென்று. அந்தக் கட்டளையை நிறைவேற்றுவதுதான் மிகவும் கடினமாயிருந்தது.

ஏதோ இவ்வளவு தூரமும் பிரயாணம் செய்த போது நிறைவேற்றியாகி விட்டது. இன்னும் இரண்டு நாளையப் பிரயாணம் தானே மிச்சமிருக்கிறது? அதுவரை பொறுமையுடன் இருந்தே தீர வேண்டும். ஆதவன் மறைவதற்குள் கடம்பூரை அடைய வேண்டும் என்ற கருத்துடன் சென்று கொண்டிருந்த வந்தியத்தேவன் சிறிது நேரத்துக்கெல்லாம் வீர நாராயணபுர விண்ணகரக் கோயிலை நெருங்கினான்.

அன்று ஆடித்திருமஞ்சனத்திருவிழாவும் சேர்ந்திருந்தபடியால் கோயிலைச் சுற்றியுள்ள மரத் தோப்புகளில் பெரும் ஜனக்கூட்டம் சேர்ந்திருந்தது. பலாச்சுளைகளும் வாழைப்பழங்களும் கரும்புக் கழிகளும் பலவகைத் தின்பண்டங்களும் விற்பவர்கள் ஆங்காங்கே கடை வைத்திருந்தார்கள். பெண்கள் தலையில் சூடிக்கொள்ளும் மலர்களையும் தேவ பூஜைக்குரிய தாமரை மொட்டுக்கள் முதலிய வற்றையும் சிலர் விற்றுக்

கொண்டிருந்தார்கள். தேங்காய், இளநீர், அகில், சந்தனம், வெற்றிலை, வெல்லம், அவல், பொரி முதலியவற்றைச் சிலர் கும்பல் கும்பலாகப் போட்டுக் கொண்டிருந்தார்கள். ஆங்காங்கே வேடிக்கை விநோதங்கள் நடந்து கொண்டிருந்தன. ஜோசியர்கள், ரேகை சாஸ்திரத்தில் வல்லவர்கள், குறி சொல்லுகிறவர்கள், விஷக் கடிக்கு மந்திரிப்பவர்கள் இவர்களுக்கும் அங்கே குறையில்லை. இதையெல்லாம் பார்த்துக் கொண்டு சென்ற வந்தியத்தேவன் ஓரிடத்தில் ஒரு பெருங்கூட்டம் நின்று கொண்டிருப்பதையும் அந்தக் கூட்டத்துக்குள்ளேயிருந்து யாரோ சிலர் உரத்த குரலில் வாக்குவாதம் செய்யும் சத்தம் வருவதையும் கவனித்தான்.

(தொடரும்...)

கோபா குழுவில் இருந்து சாணக்கியன் விலகல்

சிறீதரன் நியமனம்

(கொழும்பு)

பாராளுமன்றில் நியமிக்கப்பட்டுள்ள அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிலிருந்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் விலகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகரின் இந்த அறிவித்தலை பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ நேற்று பாராளுமன்ற அமர்வில் அறிவித்தார். இதனையடுத்து, அவரது வெற்றிடத்திற்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதி சபாநாயகர் அறிவித்துள்ளார். (நி)

இலங்கைக்கு வரும் சீனக்கப்பல்

(கொழும்பு)

சீனக் கப்பலொன்று இன்று அல்லது நாளை இலங்கை கடலுக்கு வரவுள்ளதாக கடல் சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இலங்கை கடற்பரப்பில் தீப் பிடித்து மூழ்கிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் இடிபாடுகளை மீட்பதற்காக இந்தக் கப்பல் நாட்டிற்கு வரவுள்ளதாக அந்த சபை தெரிவித்துள்ளது.

இடிபாடுகள் அகற்றப்படும் வரை இந்தக் கப்பல் இலங்கைப் பெருங்கடலில் பல மாதங்கள் இருக்கும் என்றும் அதன் தலைவர் சட்டத்தரணி தர்ஷனி லஹந்தபுர தெரிவித்தார். (நி)

3 பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

(கொழும்பு)

நுகேகொட கிராமச் சந்தியில் நேற்றுக் காலை 3 பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

நேற்றுக்காலை 6 மணியளவில் கோட்டையில் இருந்து பயணித்த 138 ஆம் இலக்க தனியார் பேருந்து வீதி விளக்குகளை புறக்கணித்ததன் காரணமாக மேலும் இரு பேருந்துகளுடன் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் பேருந்து சாரதி ஒருவர் காயமடைந்து களுபோவில மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி)

நீர் நிரம்பிய கற்குழிக்குள் மூழ்கி இரு சிறுவர்கள் உயிரிழப்பு

(கொழும்பு)

நவகமுவ - அக்பார்வத்த, கொரதொட்ட பிரதேசத்தில் நீர் நிரம்பியிருந்த கற்குழியொன்றுக்குள் மூழ்கி 2 சிறார்கள் உயிரிழந்துள்ளனர்.

நீர் நிரம்பியிருந்த கற்குழிக்குள் நேற்று முன்தினம் மாலை இந்தச் சிறார்கள் விளையாடிக் கொண்டிருந்த போதே, நீரில் மூழ்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீரில் மூழ்கிய 2 சிறார்களையும் பிரதேச மக்கள் மீட்டு, ஒருவல மருத்துவமனையில் அனுமதித்த போதிலும், சிறுவர்கள் ஏற்கனவே உயிரிழந்திருந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

கடுவளைப் பகுதியை சேர்ந்த 14 மற்றும் 15 வயதான இரண்டு சிறார்களே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக நீர் நிரம்பியுள்ள பகுதிகளில் சிறார்களை விளையாடுவதற்கு அனுமதிக்க வேண்டாம் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (நி)

சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

ஒக்டோபர் மாத முதல் பாதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 20,000 ஐ கடந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது நாட்டிற்கு வருகை தரும் சர்வதேச பார்வையாளர்களின் விகிதத்தில் முன்னேற்றத்தைக் காட்டுவதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையால் வெளியிடப்பட்ட தற்காலிகத் தரவுகளின்படி, ஒக்டோபர் முதலாம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை இலங்கைக்கு மொத்தமாக 20 ஆயிரத்து 573 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைத் தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கள் மகத்தான பணியைச் செய்யப்
பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை வையுங்கள்.
-- விவேகானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

தந்தது உன் தன்னை கொண்டது என் தன்னை யார் கொலோ சதுரர்

திருவாசகம் தமிழுக்குக் கிடைத்த பெரும் சொத்து.

அதனாலன்றோ **திருவாசகம் என்னும் தேன்** என்று ஞானவான்கள் போற்றித் துதி செய்தனர்.

திருவாசகத்தின் பெருமை கண்ட கனடா நாட்டைச் ஜி.யு.போப் அடிகளார் அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புச் செய்தார்.

அறுபத்து மூன்று நாயன்மார் வரிசையில் இடம்பெறாத மணிவாசகர் சாயுச்சியம் என்ற உச்சபதவியைப் பெற்றார் என்பதற்குள் அவர் தந்த திருவாசகத்தில் சிவப்பரம்பொருள் உள்ளம் உருகி நெகிழ்ந்து தன்னை ஒத்த தகைமையை மணிவாசகருக்குக் கொடுத்தருளினார்.

ஊனுருகப் பாடவல்ல மணிவாசகர் ஓர் இடத்தில் சிவப்பரம்பொருளைப் பார்த்து;

தந்தது உன் தன்னை கொண்டது என் தன்னை யார் கொலோ சதுரர் எனக் கேட்கிறார்.

சிவனே! உன்னை நீ எனக்குத் தந்து என்னை ஆட்கொண்டாய்.

இதில் நீயா நானா கெட்டிக்காரர் என்பது அவரின் கேள்வி.

இந்தக் கேள்விக்குள் சிவன் மீது மாணிக்க வாசகருக்கு இருக்கக்கூடிய அன்பின் உச்சம் உணரப்படும் என்பதோடு எங்கள் நாட்டின் சமகால அரசியலுக்கு வருவோம்.

ஜனாதிபதி கோட்டாபய பதவி விலக வேண்டும் என்ற கோசத்தை காலிமுகத்திடலில் ஓங்கி ஒலிக்கும் ஆழக்கடலோசை அள்ளி வீசுகிறது.

தன் பதவியை எப்படியும் தக்கவைக்க கோட்டாபய ராஜபக்ஷ கடும் பிரயத்தனம் செய்கிறார்.

ஒரு கட்டத்தில் தன் அண்ணன் மகிந்த ராஜபக்ஷவைப் பிரதமர் பதவியில் இருந்து விலக்குவதன் மூலம் தனது ஜனாதிபதிப் பதவியைக் காப்பாற்ற முடியும் என்று நினைத்த கோட்டாபய ராஜபக்ஷ அதனைச் செய்தாகின்றார்.

இப்போது மகிந்த ராஜபக்ஷவின் இடத்துக்கு பிரதமர் யார்? என்ற கேள்வி எழுகிறது.

ரணில் விக்கிரமசிங்கவை அழைத்த கோட்டாபய ராஜபக்ஷ நீங்கள் பிரதமராக இருங்கள் எனக் கூறுகிறார்.

அரசியல் புலத்தில் ஒரு பெரும் வரலாற்றுத் திருப்புமுனை நடக்கிறது.

எதிர்க்கட்சி வரிசையில் அதிலும் ஒற்றை ஆசனத்தைக் கொண்டுள்ள ஒருவரைப் பிரதமராக்குகின்ற நடவடிக்கை வெற்றி பெறுகிறது.

ரணில் விக்கிரமசிங்க பிரமராகியதோடு நிலைமை அமைதியடையும் என்றால் இல்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்ற காலிமுகத்து ஆழ் கடல் அலை பேரலையாக எழுந்து ஜனாதிபதி மாளிகையை தாக்க, எதுவும் செய்ய முடியாத கோட்டா வெளிநாட்டுக்கு தப்பியோடினார்.

ஆயினும் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக அவர் பிரகடனம் செய்தார்.

அதன் விளைவுதான் மீளவும் மகிந்த இந்த நாட்டின் பிரதமராக வருவதற்கு ஆயத்தம் செய்கிறார்.

இங்குதான் ரணில் கெட்டிக்காரரா? அல்லது ரணிலை பிரதமராக – ஜனாதிபதியாக ஆக்கிய ராஜபக்ஷ தரப்பு கெட்டிக்காரரா? என்ற கேள்வி எழுகிறது.

இந்தியாவில் தடைசெய்யப்பட்ட
கடலட்டைத் தொழில்நுட்பத்தை வடக்கில் பயன்படுத்துவதற்கு ஏற்பாடு
யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனம்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் தடை செய்யப்பட்ட கடலட்டைத் தொழில்நுட்பத்தை வடக்கில் பயன்படுத்துவதற்கு ஏற் பாடுகள் நடைபெறுவதாக யாழ். மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம் மேளனத் தலைவர் அன்னராசா தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது வடக்கு பிரதேசத்தில் முதலீடு செய்வதாக கூறி, இந்தியாவில் தடை செய்யப்பட்ட தொழில்நுட் பத்தினை கொண்டு வருவதனை வடக்கு மீனவ தொழிலாளர்கள் விரும்பவில்லை.

இதனை முற்று முழுதாக தடுத்து நிறுத்து மாறும் யாழ்ப்பாண இந்திய துணைத்தூது வரை யாழ். கடற் தொழிற்சங்கம் சார்பாக கேட்டுக் கொள்கின்றோம்.

அதேபோல் இந்தியாவில் கடலட்டை தொழில் நுட்பம் தடைசெய்யப்பட்டிருக்கிறது. ஆனால் கடந்த வாரம் மன்னார் ஓலைத் தொடுவாயில் அமைந்துள்ள கடலட்டை உற் பத்தி நிலையத்திற்கு இந்திய முதலீட்டாளர் வருகை தந்து அந்த தொழில்நுட்பத்தை முதலீடு செய்ய இருப்பதாக அறியும் செய்தி எங்களுக்கு மிகவும் கவலை அளிக்கிறது. இதனை வடக்கு கடற் தொழிலாளர் கள் விரும்பவில்லை.

வடக்கில் இந்த கடலட்டை தொழிநுட்பத்தை கொண்டு வந்து வடக்கு தொழிலாளர்களின் வாழ் வாதாரத்தை அழிக்கும் செயற்பாட்டினை இந்திய அரசாங்கம் செய்யக்கூடாது என்ற செய்தியை இந்திய அரசாங்கத்துக்கு சொல்வதோடு, யாழ். மாவட்டத்தில் இந்த கடலட்டை தொடர்பான பிரச்சினை நாள் ஒரு வண்ணம் பொழுதொரு மேனியுமாக நடந்துகொண்டிருக்கிறது என்றார்.

(ம-7,33,104)

யாழில் இளம் பெண்ணை மிரட்டி பணம் பறித்த ஆட்டோ சாரதி
வைரவர் கோவில் ஆட்டோ தரிப்பிட சாரதிகளால் நன்கு கவனிக்கப்பட்டார்

யாழ். நகர் சேவைத் தரிப்பிட அனுமதி அற்ற, வீதியால் சென்ற முச்சக்கரவண்டி ஒன்றில் பயணித்த இளம் பெண் ஒருவரை மிரட்டி சுமார் ஒரு கிலோ மீற்றருக்கும் குறைவான தூரத்திற்கு 2000 ரூபா கூலி கொடுக்குமாறு மிரட்டிப் பணம் பெற்றுக் கொண்ட சாரதி ஒருவர் வைரவர் கோயில் சேவை தரிப்பிட முச்சக்கர்வண்டி சாரதிகளால் நன்கு கவனிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட குறித்த பெண்ணுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்பட்ட சம்பவம் ஒன்று நேற்று முற்பகல் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதான அருகாமையிலிருந்து யாழ்ப்பாணம் நகருக்கு செல்ல குறித்த இளம் பெண் வீதியால் சென்ற ஒரு முச்சக்கர வண்டியை மறித்து ஏறியுள்ளார்.

தரிப்பிட சேவை அனுமதி பெறாத ஒரு முச்சக்கரவண்டியில் ஏறிய பெண் தான் செல்லவுள்ள இடத்தை கூறி எவ்வளவு பணம் என்று கோரிய போது பார்த்து எடுக்கலாம் எனக் கூறி சாரதி அப் பெண்ணை கூட்டிச் சென்றுள்ளார்.

யாழ். நகரை அடைந்ததும் கூலியாக 2000 ரூபா பணத்தை தரும்படி கோரியுள்ளார். ஆனால் குறித்த பெண் தன்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும் ஏன் ஒரு கிலோ மீற்றர் தூரத்திலுள்ள இடத்துக்கு இவ் வளவு கூலி என்றும் கேட்டுள்ளார்.

அதற்கு பதிலளிக்காத குறித்த தரிப்பிட சேவை அனுமதி பெறாத முச்சக்கரவண்டி ஓட்டுனர் 2000 ரூபா பணத்தை கொடுக்குமாறு மிரட்டியுள்ளார்.

சாரதியின் மிரட்டலால் அச்சமுற்ற குறித்த இளம் பெண் தன்னிடம் 1500 ரூபாதான் இருப்பதாக கூறி கொடுத்துள்ளார்.

இதன்பின்னர் அந்த இளம் பெண் யாழ். வைரவர் கோயிலடியிலுள்ள முச்சக்கரவண்டி தரிப்பிடத்திற்கு அழுதவாறு சென்று குறித்த சம்பவத்தை கூறி குறித்த தூரத்துக்கு எவ்வளவு கூலி என்று கேட்டுள்ளார்.

குறித்த இளம்பெண் ஏமாற்றப்பட்டுள்ளார் என்பதை புரிந்துகொண்ட வைரவர் கோயில் முச்சக்கரவண்டி தரிப்பிட சாரதிகள் துரிதமாக செயற்பட்டு குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய தரிப்பிட சேவை அனுமதியில்லாத முச்சக்கரவண்டியை தேடி கண்டுபிடித்து சாரதியிடம் விளக்கம் கோரியிருந்தனர். ஆனாலும் சம்பவத்தை ஏற்றுக்கொள்ளாத குறித்த முச்சக்கரவண்டி சாரதி நன்கு கவனிக்கப்பட்ட பின்னர் தனது தவறை ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து ஏமாற்றி கூலியாக பறிக்கப்பட்ட பணத்தை வைரவர் கோயிலடி முச்சக்கரவண்டி சாரதிகள் குறித்த பெண்ணிடம் மீள பெற்றுக்கொடுத்ததுடன் இனி இவ்வாறான மோசடிகளில் ஈடுபடக் கூடாது எனக் கூறி குறித்த மோசடியில் ஈடுபட்ட சாரதியை எச்சரித்து அனுப்பி வைத்திருந்ததுடன் இவ்வாறான தரிப்பிட அனுமதி அற்ற சேவைகளை தவிர்க்குமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-7,104)

13 கோடி ரூபா பெறுமதியான
கொக்கெய்ன் போதையுடன்
பெண் ஒருவர் கட்டுநாயக்கவில் கைது

தென் அமெரிக்காவின் சூரினாம் நாட்டில் இருந்து இலங்கை வந்த பெண் பயணி ஒருவரின் பயணப் பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2.5 கிலோ கிராம் கொக்கெய்னை இலங்கை சுங்கப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

நேற்று கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த 26 வயதான இந்த பெண்ணின் சந்தேகத்திற்கிடமான நடத்தையை அடுத்து விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவர் பிரேசிலில் இருந்து கட்டாருக்குப் பயணம் செய்து, பின்னர் கட்டார் ஏர்வேஸ் மூலமாக இலங்கைக்கு வந்துள்ளார். (ம-7)

நவராத்திரி பரிசு வழங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை கிட்ஸ் பார்க் நவராத்திரி விழா பரிசில் வழங்கல் -2022 நிகழ்வானது இன்று மாலை 3.15 மணியளவில் முன்பள்ளி அரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக இந்தியத் துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண போதனா மருத்துவ மனை பிரதிப் பணிப்பாளர் சிறிபவானந்தராஜா கலந்து கொள்ளவுள்ளார். (4)

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை யாழ். பிரதேசத்தின் பெரும் பகுதிகளில் மின்சாரம் தடைப்படும்.

நகர் கடற்படைமுகாம், இ.போ.ச டிப்போ- காரைநகர், களபூமி, பாலக்காடு அம்மன் கோவிலடி-காரைநகர், தோப்புக்காடு -காரைநகர், ஊரி-காரைநகர், Maravanpulo wind power plant ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஜீவன் அரிசி ஆலை, சுஜன் அரிசி ஆலை-காத்தான் கோட்டம், மகாறம்பைக்குளம், மறக்கறம்பளை -கணேசபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

நூற் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபை பொதுநூலகத்தின் தேசிய வாசிப்பு மாதம் - 2022 நூற்கண்காட்சி இன்று காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் அருணோதய கல்லூரியின் மல்லாகம் உப அலுவலகப் பொறுப்பதிகாரி செ. வசீகரன் தலைமையில் இடம் பெறவுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலப்பதிகாரம்

பிரியமானவர்களுக்கு என்ன நேர்ந்தது?

நிச்சயமாக எத்தனையோ அறிஞர்களை அவர்கள் பிறந்த நாடு புரிந்து கொள்ளுமுன் பிற நாடுகள் புரிந்து கொண்டுள்ளன. அதற்குப் பிறகுதான் சொந்த நாட்டினருக்கே அவர்களுடைய பெருமை தெரியும். இது கடந்த காலத்திலும் இப்போதும் மட்டுமல்ல எதிர்காலத்திலும் தொடரத்தான் போகிறது.

'சரியாகச் சொன்னீர்கள்' என்று பாராட்டினான் மாடலன். 'சரி அரசே கற்புக்கரசிக்கு கோயில் எழுப்பும் பணி உங்களுக்காகக் காத்திருக்கிறது. நான் விடைபெறட்டுமா?

'அது எப்படி?' கண்ணகியின் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடைய நீ இல்லாமல் இந்த நிகழ்ச்சி எப்படி நடக்க முடியும்?

நான் எதற்கு அரசே?

உன்போல் வேதம் கற்று அறிந்தவர்களின் வழி நடத்துதல் எங்களுக்கு இந்த வேளையில் மிக அவசியம். உடனடியாக நீயும் எங்களுடன் புறப்படு.

அரச கட்டளையை மீறமுடியுமா? செங்குட்டுவனின் சேனைகளுடன் மாடலனும் புறப்பட்டான். அவர்கள் வஞ்சி நகரை நோக்கிப் பயணம் செய்தார்கள்

கற்புக்கரசிக்குக் கோயில்

கண்ணகி கோயில் எல்லாச் சிறப்புக்களோடும் கட்டிமுடிக்கப்பட்டது.

ஒரு நல்ல நாளில் கண்ணகியின் உருவச் சிலையைக் கோயிலில் நிறுவினார்கள்.

அன்று கண்ணகியின் உயிர்த்தோழி தேவந்தி மாதரியின் மகள் ஐயை உட்பட இதர சேர நாட்டு மக்களும் சான்றோர்களும் அங்கே கூடியிருந்தார்கள்.

உருவச்சிலை பீடத்தில் நிறுவப்பட்ட போது வானத்தில் சகல அலங்காரங்களோடு கண்ணகி தோன்றினாள். சேரன் செங்குட்டுவனுக்குக் காட்சி கொடுத்தாள்.

கண்ணகியைத் தெய்வ உருவில் பார்த்த தேவந்தி மீது பாசண்டச் சாத்தன் வந்தான்.

அவள் மாடலனைப் பார்த்து மாதிரி மற்றும் கண்ணகி கோவலனின் தாய்மார்களின் மரணத்தை யாம் ஏற்கவில்லை. அவர்களைப் பூலோகத்துக்குத் திருப்பி அனுப்பி விட்டோம் என்றாள்.

அப்படியா, அவர்கள் எங்கே?

அதோ அந்த மூன்று சிறுமியரைப் பார். அவர்கள்தான் அது என்று கூறி மலையேறினான் பாசாண்டச் சாத்தன்.

(தொடரும்)

போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 103

இரண்டாவது சுற்று பேச்சுவார்த்தையின் போது, ரஷ்யாவும் உக்ரைனும் பொதுமக்களை வெளியேற்றுவதற்கான மனிதாபிமான தாழ்வாரங்களைத் (பாதைகளை) திறக்க ஒப்புக்கொண்டன.

ஜேர்மன் பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சு உக்ரைனுக்கு 2,700 தரையிலிருந்து வான் ஏவுகணைகளை வழங்க அங்கீகாரம் அளித்தது. உக்ரைன் பாராளுமன்றம், ரஷ்ய அரசாங்கம் அல்லது ரஷ்ய நாட்டினருக்கு சொந்தமான சொத்துக்களை பறிமுதல் செய்ய அனுமதிக்கும் சட்டத்தை இயற்றியது.

பலாக்லியாவைக் கைப்பற்றியதாக ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சு கூறியது. இதற்கிடையில், ஜனாதிபதி ஜெலென்ஸ்கி ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்துமாறு கேட்டுக் கொண்டார். இதுவே "இந்தப் போரை நிறுத்த ஒரே வழி" என்று கூறினார்.

ரஷ்யப் படைகளுக்கு எதிராகப் போரிடுவதற்காக சர்வதேச தன்னார்வத் தொண்டர்களின் முதல் தொகுதி உக்ரைனுக்கு வந்திருப்பதாகவும் மேற்கத்தேய நாடுகளிடம் இருந்து உக்ரைன் தொடர்ந்து ஆயுதங்களைப் பெற்று வருவதாகவும் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி அறிவித்தார்.

உக்ரைனுக்கு எதிரான போரைக் கண்டித்து ரஷ்ய மக்கள் போராட்டம்

முன்பு நடைபெற்ற போராட்டங்களில், பொலிஸார், கலவரத்தடுப்பு அதிகாரிகள் ஆகியோர் போராட்டக்காரர்களை வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தினர். மேலும், டஜன் கணக்கானோரை கைது செய்தனர். கடந்த சில தினங்களில் நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறையில் அடைக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் அலெக்சே நவால்னி இராணுவத் தாக்குதலுக்கு எதிராக தினசரி பேரணிகளுக்கு அழைப்பு விடுத்ததால், புதிய எதிர்ப்பு அலை உருவாகியுள்ளது. "பயமுறுத்தும் கோழைகளின் தேசமாக" ரஷ்யா இருக்கக் கூடாது என அவர் முன்னதாகக் கூறியிருந்தார்.

யுக்ரேனுக்கு எதிரான போரைக் கண்டித்து ரஷ்ய மக்கள் போராட்டம்

உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா படையெடுப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினின் சொந்த நகரமான செயின்ட் பீட்டர்ஸ்பெர்க்கில் ரஷ்ய மக்கள் சாலைகளில் இறங்கி போராட்டங்களில் ஈடுபட்டனர்.

ரஷ்ய கப்பலை கைப்பற்றிய ஜேர்மனி

ரஷ்யாவின் பெரும் பணக்காரரான அலிஷர் உஸ்மானோவ்வுக்கு சொந்தமான 600 மில்லியன் டொலர்கள் (445 மில்லியன் பவுண்ட்) மதிப்பிலான கப்பல் ஒன்றை ஜேர்மன் அதிகாரிகள் கைப்பற்றியதாக, செய்தி வெளியாகியுள்ளது.

ஃபோர்ப்ஸ் இதழ் வெளியிட்ட செய்தியின்படி, தில்பார் என்று பெயரிடப்பட்ட 512 அடி (156 மீ) கப்பல் ஹாம்பர்க்கில் கைப்பற்றப்பட்டது. உலோக தொழிலதிபரான உஸ்மானோவ், ரஷ்ய அரசாங்கத்துடனான உறவுகள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தால்தடைவிதிக்கப்பட்ட 25 முக்கிய ரஷ்யர்களுள் ஒருவர். ரஷ்யாவிற்குச் சொந்தமான பிற படகுகள், அமெரிக்காவுடன் குற்றவாளிகளை ஒப்படைக்கும் ஒப்பந்தத்தில் இல்லாத இந்தியப் பெருங்கடலில் உள்ள தீவு நாடான மாலைத்தீவுக்கு படையெடுப்பதைக் காண முடிந்தது.

வேக்யூம் வெடிகுண்டு எனப்படும் தெர்மோபரிக் ஆயுதத்தை ரஷ்யா உக்ரைனில் பயன்படுத்தியுள்ளதா?

உக்ரைனில் நடந்த சண்டையில் ரஷ்யா தெர்மோபரிக் ஆயுதம் அதாவது வேக்யூம் வெடிகுண்டைப் பயன்படுத்தியதாக மனித உரிமைக் குழுக்களும் அமெரிக்காவுக்கான உக்ரைன் தூதரும் குற்றம் சாட்டியுள்ளனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுவேலி பகுதி...

அடிப்படையில் ஆவரங்கால் கிழக்கு, புத்தூரை சேர்ந்த 43 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரையும், அவரிடமிருந்து மீட்கப்பட்ட போதை மாத்திரைகளையும் மேலதிக நடவடிக்கைக்காக புலனாய்வு பிரிவினர் அச்சுவேலி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (ம-7,33,104)

மன்னாரில் விபத்...

தன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

குறித்த விபத்து சம்பவத்தை தொடர்ந்து பஸ் சாரதியும் நடத்துனரும் விபத்தின் பின்னர் அவ்விடத்தில் இருந்து தலைமறைவாகி உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,285)

கரவெட்டி இளை...

திங்கட்கிழமை இரவு உணவு அருந்திய பின்னர் உறங்கச் சென்றவர், அதிகாலை உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார்

குடும்பத் தகராறு காரணமாக சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட கைகலப்பில், இளைஞனின் உடலில் காயங்கள் ஏற்பட்டமையால் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்துள்ளார் என கோப் பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

இறப்புச் சம்பவம் தொடர்பான உடற் கூற்றுப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

அமெரிக்காவின்...

இதனை அறிவித்துள்ளது.

அமெரிக்க - இலங்கை இருதரப்பு உறவுகள் மற்றும் இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்து கலந்துரையாடுவதே இந்த விஜயத்தின் நோக்கமாகும். (ம-7)

21 வயது இளம்...

கழிக்கச் சென்றவரை அழைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-7,250,290)

விழிப்புணர்வு...

யாழில் போதைப்பொருள் பாவனைக் கெதிராக விழிப்புணர்வு நிகழ்வு திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நேற்றைய தினம் காலை 9 மணியளவில்இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வானது குறித்த பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றிருந்ததுடன், மாணவர்களுக்கான போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு நாடகம் ஒன்று இடம் பெற்றிருந்தது.

மாணவர்களுக்கான போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு இடம்பெற்று தொடர்ந்து பேரணியும் நடைபெற்று நிறைவடைந்தது.

இதில் யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் நல்லூர் பிரதேச சபை தவிசாளர் எ.மயூரன் மற்றும் தனியார் அரசசார்பற்ற நிறுவனத்தினர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,33)

கனமழைக்கு ...

இது தொடர்பில் அவரால் வெளியிடப்பட்ட அறிக்கையில்,

மத்திய வங்காள விரிகுடாவில் முல்லைத்தீவுக்கு கிழக்காக 1100 கி.மீ. தூரத்தில் உருவாகியுள்ள மேலடுக்கு சுழற்சியானது நாளை (20.10.2022) தாழமுக்கமாக மாறும் வாய்ப்புள்ளது.

இது மேலும் விருத்தியடைந்து 22.10.2022 அல்லது 23.10.2022 அளவில் நடுத்தர அளவிலான புயலாக மாறுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. இது புயலாக மாறினால் வடக்கு வடகிழக்கு திசை நோக்கியே (இந்தியாவின் ஒடிசா அல்லது மேற்கு வங்கம்) நகரும் வாய்ப்புள்ளது.

இதன் காரணமாக இன்று (நேற்று) இரவு முதல் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. அத்தோடு வெப்பச் சலன செயற்பாடும் காணப்படுகிறது. எனவே கடுமையான இடிமின்னல் நிகழ்வுகளுக்கும் வாய்ப்புண்டு.

குறிப்பாக இன்று யாழ்ப்பாண மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

இந்திய இழுவை...

படகுகளை கண்டதும் தொழிலில் ஈடுபடாமல் திரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனப் பிரதிநிதிகள் யாழ். ஊடக அமையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடாத்திய ஊடக சந்திப்பிலேயே இதனை தெரிவித்தனர்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர்கள், இலங்கைக் கடற்படை, இந்திய துணைத்தூதரகம் ஆகியன வடபகுதி கடலுக்குள் அத்துமீறி இந்திய இழுவைப்படகுகள் மீன்பிடியில் ஈடுபடுவதை தடுக்கவேண்டுமென கோரிக்கை விடுத்தனர். (ம-7,33)

பிரச்சினைகளை...

நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

மேலும், போதைப் பொருளுக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்கும் வகையிலான சட்ட ஏற்பாடுகளை நீதி மன்றத்திற்கு வழங்குதல் மற்றும் புனர் வாழ்வு மையம் ஒன்றினை வட பகுதியில் உருவாக்குதல் போன்றவற்றின் அவசியம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வலியுறுத்தப்பட்ட நிலையில், குறித்த கருத்தினை ஏனைய அமைச்சர்களும் ஏற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் தீர்க்கப்பட வேண்டிய விடயங்களை தொடர்பில் ஆராயும் நோக்கில் ஜனாதிபதி தலைமையில் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள குறித்த குழுவில், பிரதமர் தினேஸ் குணவர்தன, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

காணாமல் போனோர் விவகாரம், அரசியல் கைதிகள் விவகாரம், காணி தொடர்பான பிணக்குகள் உப்படவடக்கு-கிழக்கு பகுதி மக்களினால் அடையாளப்படுத்தும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து பரிகாரம் வழங்குவதே இக்குழுவின் நோக்கமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

சில...

பில் ஊடகவியலாளர் வினவிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அவர், அத்தியாவசிய உணவு பொருட்கள் தொடர்பில் அமைச்சரவை கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. அதன்போது, பல அத்தியாவசிய பொருட்களின் விலை சந்தையில் குறைவடைந்துள்ளதாக வர்த்தக அமைச்சர் தெரிவித்ததாக கூறினார்.

அதற்கமைய, பருப்பு கிலோவொன்றின் விலை 685 ரூபாயிலிருந்து 398 ரூபாயாக குறைவடைந்துள்ளதாகவும், நாடு அரிசி கிலோவொன்றின் விலை 220 ரூபாயிலிருந்து 165 ரூபாயாகவும், வெள்ளை பச்சையரிசி கிலோவொன்றின் விலை 210 ரூபாயிலிருந்து 160 ரூபாயாகவும், சீனி கிலோவொன்றின் விலை 375 ரூபாயிலிருந்து 275 ரூபாயாகவும், கோதுமை மா கிலோவொன்றின் விலை 395 ரூபாயிலிருந்து 275 ரூபாயாகவும் குறைவடைந்துள்ளதாக வர்த்தக அமைச்சர் குறிப்பிட்டார் என அமைச்சரவை பேச்சாளர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், பால்மா விலை குறைப்பு தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. இந்த விலை குறைப்பு தொடர்பான சந்தை நிலைமைகளை தொடர்பில் வர்த்தக அமைச்சர் ஊடக சந்திப்பொன்றின் ஊடாக விளக்கமளிப்பாரென அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல்
மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை

(13175)

தொடர்புகளுக்கு - ஜெயம்

077 814 7389, 077 986 5457

அன்பான வாடிக்கையாளருக்கு

மகிழ்ச்சியான செய்தி

கொழும்பு விலையில் யாழ். நகரில்

உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சில வருட காலமாக இயங்கிவரும் ஸ்தாபனத்தில் இன்றுமுதல் விசேட விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

மொத்தக் கொள்வனவிற்கு 10% கழிவு

பான்ஸிப் பொருட்கள், சில்வர் பொருட்கள், பை (Bag) வகைகள், கிளாஸ் வகைகள், மாபிள் வகைகள், பிளாஸ்ரிக் பொருட்கள், பாதணி வகைகள், முகக் கவசங்கள் (Mask), அன்பளிப்புப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மணிக்கூடுகள், குடை, மழைக்கவசங்கள், தையல் உபகரணங்கள், பாடசாலைப் பொருட்கள், கவரிங் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள்

சரவணபவன் பான்ஸி ஹவுஸ்

இல. 26/1, ஜம்மா பள்ளிவாசல் லேன்,
(செம்மா தெரு ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.

(13106)

உரிமையாளர் - தே. கலைத்தாசன் (கரன்)

021 315 5900, 077 468 3354

பெற்றோலிய சட்டமூலம் நிறைவேற்றம்

(கொழும்பு)

பெற்றோலிய உற்பத்தி விசேட ஏற்பாடுகள் திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பில், சட்டமூலம் 60 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

சட்டமூலத்திற்கு ஆதரவாக 77 வாக்குகள் அளிக்கப்பட்டதுடன், எதிராக 17 வாக்குகள் மாத்திரமே வழங்கப்பட்டன.

இந்நிலையில், பெற்றோலிய உற்பத்தி விசேட ஏற்பாடுகள் திருத்த சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, பெற்றோலிய தொழிற் சங்கங்கள் நேற்று சுகயீன விடுமுறையை அறிக்கையிட்டனர். (ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13168)

076 825 7716 (ஆகாஸ்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (13147)

VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ONLINE APPLICATIONS
- VISA APPOINTMENTS
- PASSPORT APPLICATION
- POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4921)

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

அமெரிக்க லொத்தர் இலவச விசா

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

Passport அவசியமில்லை

55'000 விசா இலங்கையருக்கு அந்த வாய்ப்புக்கள்

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்

ஏமாற்றங்களை தவிர்க்க **உடனே பதியுங்கள்**

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இந்த வருடம் ஒருக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

வெளிநாட்டு உறவினர்களுக்கு வெளிநாடு செல்ல கட இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்

எந்தவிட விசா வெளிநாடு பெறுவதற்கான எமது V2 Travels and Tours என்ற Facebook பக்கத்தில் மட்டுமே. (C-4921)

V2 Travels 0768226240 0768226244

காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- ஓட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன் (காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்.பஸ் நிலையத்திலிருந்து 1½km தூரம்.
- பார்வையிடும் நேரம் :- காலை 6.00 - மாலை 6.00

(13108)

தொடர்பு

077 911 6983
076 755 8606

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், பிழப்பிணி எனினும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.